# குமுத வாசகம்

படிவம்—உ

(பொதுப் பகுதி)

வித்துவான் பாலூர். கண்ணப்ப முதலியார்

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்
சென்னை-1.

[விலை அணா 14.

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**


The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குமுத வாசகம்



டி.வி.செல்லப்ப சாஸ்திரி & ஸன்ஸ்

சென்னை.1.

# குமுத வாசகம்

இரண்டாம் படிவம்

(பொதுப் பகுதி)

ஆசிரியர்

வித்துவான், பாலூர். கண்ணப்ப முதலியார்

தலைமைத் தமிழ் ஆசிரியர்

கெல்லட் உயர்நிலைப் பள்ளிக்கூடம்,

திருவல்லிக்கேணி, சென்னை

வெளியிட்டவர்

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸ்

சென்னை

உரிமை பதிவு] 1951 [விலை அணா 0—14—0

First Edition November, 1951.

T. V. C. Press, Madras.

# முன்னுரை

'குமுதவாசகம்' என்னும் பெயருடன் வெளி வந்துள்ள இந்நூல், சென்னை அரசியலார் புதிதாக வெளியிட்டுள்ள 1951 பாடதிட்டத்தின்படி எழுதப்பட்டுள்ளது. இது எல்லா மாணவர்களும் படித்தற்குரிய பொதுப் பகுதியை மட்டும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

இலக்கணப் பாடத்தைத் தனித்துப் பயில்கையினும், உரைநடைப் பாடத்தோடு தொடர்ந்து பயிலின், அப்பாடத்தில் ஓர் உணர்ச்சியும் ஊக்கமும், தோன்றும் எனக் கருதி, ஒவ்வோர் உரைநடைப் பகுதியின் கீழும் இலக்கணப் பாடம் எழுதப்பட்டு இருப்பது, மாணவர்கள் தம் தமிழ் அறிவைச் செம்மையுடன் பெறப் பெருந்துணையாகும் என்பதில் ஐயமில்லை.

அறிவு வளர்ச்சிக்குரிய பல திறப்பாடங்களும், ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் வினாக்களும், பயிற்சியும், வேண்டிய அளவுக்குக் குறிப்புரையும் இந்நூல் தன்கண் கொண்டிருத்தலால், "பொன்மலர் நாற்றம் உற்றாற்போல்" மாணவர்கள் ஆயாசம் இன்றிப் பாடங்களை நன்கு உணர்ந்து, தம் மனத்தில் பதியவைத்துக் கொள்வர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

இந்நூலில் காணும் பாடல்கள் சிலவற்றை இதில் இணைத்துக் கொள்ளத் தம் இசைவைத் தெரிவித்த உரிமையாளர்கட்கு என் நன்றியுள்ள வணக்கம் உரித்தாகுக.

இந்நூலைத் தமிழ் உலகம் ஏற்று, என்னை ஆதரித்து ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

'அம்மையப்பர் அகம்'
77, அவதானம் பாப்பையர் தெரு,
சூளை, சென்னை.
5—11—'51

இங்ஙனம்
பா. து. க.

# உள்ளுறை


## உரைநடை

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தேசியக் கொடி | .... | 1 |
| 2. | அறிவுடைய அரசர் | .... | 9 |
| 3. | வெற்றிலைப் பயிர் | ... | 17 |
| 4. | எனது கேளிக்கைப் பிரயாணம் (மகாபலிபுரம்) | | 25 |
| 5. | இயந்திரமும் சர்க்காவும் (உரையாடல்) | .... | 34 |
| 6. | சித்திரம் | .... | 41 |
| 7. | ஜகதீஸ் சந்திரபோஸ் | .... | 47 |
| 8. | சிலேடை மொழிகள் | ... | 53 |
| 9. | வடதுருவ மண்டலம் | .... | 60 |
| 10. | நீர்ப்பாசனம் | .... | 69 |
| 11. | கூட்டுறவு இயக்கம் | .... | 76 |

## செய்யுள்

| | | | |
|---|---|---|---|
| I. | தோத்திரப்பாக்கள் | .... | 83 |
| II. | நீதிப்பாக்கள் | .... | 89 |

# பொதுப் பகுதி



கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா !
கோணலற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா !

—நாமக்கல் கவிஞர்



# குமுத வாசகம்

## 1. தேசீயக் கொடி

1. அரசர்களுக்குரிய அங்கம் பலவற்றுள் தசாங்கமும் ஒன்று. தசாங்கமென்பது பத்து உறுப்புக்கள் என்று பொருள்படும். அவை பேர், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்பன. ஏனைய உறுப்புக்களைப் பற்றி நாம் இங்கு இப்பொழுது சிந்திக்காமல் கொடியைப் பற்றி மட்டும் சிந்திப்போமாக.

2. தெய்வங்கட்கும் சிறப்புடைய பெருமக்களுக்கும் தனித்தனிக் கொடிகள் உண்டு. சிவபெருமானுக்கு இடபக் கொடியும், திருமாலுக்குக் கருடக் கொடியும், பிரமனுக்கு அன்னக் கொடியும், இந்திரனுக்கு இடியும் மின்னலும் கலந்த கொடியும், தருமராஜருக்கு முரசக் கொடியும் அர்ச்சுனனுக்கு அனுமன் கொடியும், துரியோதனனுக்குப் பாம்புக் கொடியும் இருந்தனவாக நூல்கள் கூறுகின்றன. சேர சோழ பாண்டிய நாடுகளில் தனியரசு செய்து வந்த முடியுடை மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களுக்கும் தனித் தனிக் கொடிகள் உண்டு. சேரருடைய கொடியில் வில் எழுதப்பட்டிருக்கும். சோழருக்குரிய கொடியில் புலி பொறிக்கப்பட்டிருக்கும். பாண்டியருடைய பதாகையில் மீன் தீட்டப்பட்டிருக்கும்.

3. நாம் இப்பொழுது சுதந்தரம் பெற்றுச் சுதந்தர நாட்டில் வாழ்கின்றோம் அல்லவா? நமக்கும் ஒரு கொடி ஏற்பட்டுள்ளது. அதுவே மூவர்ணக்கொடியாகும். அம் மூந்நிறங்கள் காவி, வெண்மை, பசுமை நிறங்களென்பன. இவை முறையாக அமைந்திருக்கும். முதலில் காவியாகிய செம்மை நிறமும், இரண்டாவது வெண்மை நிறமும், மூன்றாவது பச்சை நிறமும் பொருந்தியிருக்கும். மூந்நிறங்களுடன் நம் கொடி திகழுவில்லை. நம் நாட்டுக் கொடியின் வெண்மை நிறத்தில் ஒரு சக்கரம் விளங்குகிறது. அச்சக்கரம் அசோகருடைய சக்கரமாகும். இம் முறையில் அமைந்த கொடியே நம் நாட்டுக் கொடி. அதாவது சுதந்தர நாட்டுக் கொடி. இதுவே 1948-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் நாள் முதல், இந்தியா எங்கும் பறக்கத் தொடங்கியது. இக்கொடியே ஆட்சியாளர்களின் அலுவல் அகங்களிலும், கோட்டைகளிலும், வியாபார நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும், கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும், மாட மாளிகைகளிலும், குடிசைகளிலும் பறந்து தேவநாட்டவர்களையும் எங்கள் சுதந்தர இந்தியாவுக்கு 'வருக! வருக' என்று அழைப்பதுபோல் காற்றால் அசைந்து எவரையும் இன்பம் ஊட்டி வருகின்றது.

4. இம் மூந்நிறக் கொடி 1948-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள்தான் ஏற்பட்டது என்று எண்ணி விடாதீர்கள். இது 1906 ஆம் ஆண்டு இம் மூந்நிறங்களுடன் விளங்கியது. அந்நிறங்களில் காவிப் பட்டையில் எட்டு நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. வெள்ளைப்பட்டையில் 'வந்தேமாதரம்' என்னும் தேசியமந்தரம் இந்தியில் எழுதப்பட்டிருந்தது.

பச்சைப்பட்டையில், இடப்பக்கம் சூரியனும், வலப் பக்கம் பிறைமதியும் திகழ்ந்தன.

5. இவ்வாறு 1906 ஆம் ஆண்டு அமைந்த கொடி, 1921 ஆம் ஆண்டு சிறிது மாறுதல் அடைந்தது. மேலே வெண்ணிறம் பெற்றது. இடையே பச்சை நிறம் அமைந்தது. கீழே செம்மை நிறம் பொருந்தப் பெற்றது. இடையில், அதாவது பச்சை நிறத்தில் நூல் நூற்கும் கருவியாகிய இராட்டை உருவம் பொறிக்கப் பட்டது. இம் முறையில் இக் கொடியை அமைத்தவர் உலகம் புகழும் உத்தமராகிய மகாத்மா காந்தியடிகள் ஆவார். இங்ஙனம் அமைந்த கொடியும் 1931 ஆம் ஆண்டு மேலும் சிறிது மாறுதலைப் பெற்றது. அதாவது மேலே காவி நிறமும் இடையில் வெண்மை நிறமும், ஈற்றில் பசுமை நிறமும் அமைந்து விளங்கியது. ஆனல், இராட்டை உருவம் மட்டும் இடையில் வெண்மை நிறத்தில் அமைந்தே இருந்தது. இவ்வாறு அமைந்த கொடியேதான் இப்பொழுது இராட்டை நீங்கப்பெற்று அசோகர் சக்கரத்துடன் விளங்கி வருகிறது.

6. இனி நம் சுதந்தரக் கொடியில் உள்ள மூன்று நிறங்களும் எந்நோக்கத்துடன் அமைந்திருக்கின்றன என்பதையும் உணர்வோமாக. காவி நிறம், தைரியத்திற்கும் தியாகத்திற்கும் அறிகுறி என்றும், வெண்மை நிறம் உண்மைக்கும், அமைதிக்கும் அடையாளம் என்றும், பசுமை நிறம் அன்புக்கும், ஆற்றலுக்கும் எடுத்துக் காட்டு என்றும் விளக்கம் கூறுகிருர்கள். இவ் விளக்கம் மிகமிகப் பொருத்தமானதே.

7. இந்தத் தேசியக் கொடிக்கு நாம் என்றும் வணக்கம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். இதனிடத்தில் நமக்கு ஒரு பக்தி தோன்றவேண்டும். தினமும் நாம் இக்கொடிக்கு வணக்கம் செலுத்த இயலாவிட்டாலும், ஆண்டுக்கொருமுறை ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியில் வரும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போதாகிலும் தவறாமலும், மறவாமலும் கொடிவணக்கம் செய்யவேண்டும். இதனை ஒவ்வோர் இந்தியனும் கடமையாகக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அன்று, பெரிய பெரிய தேசியத் தலைவர்கள் தாம்தாம் இருக்கும் ஊர்களில் ஒன்றுகூடிக் கொடியினைப் பறக்கவிட்டு வணக்கம் செலுத்திவருகின்றனர்.

8. கொடிக்கு மரியாதை காட்டவேண்டும் என்பதற்காக இக்கொடியை நம் விருப்பப்படி பயன்படுத்தக் கூடாது. தேசியவாரம், சுதந்தர நாள், காந்தியடிகள் பிறந்தநாள், குடியாட்சிபெற்ற தினம் போன்ற குறிப்பிட்ட நாட்களில் மட்டும் பறக்கவிடவேண்டும். விளம்பரச் சின்னமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. கொடியைப் பறக்கவிடுகையில் எப்போதும், சிவப்பு நிறப்பட்டை மேல்பகுதியில் திகழ பார்த்துக்கொள்ள வேண்டும்.

**வாழ்க நம் தேசியக்கொடி.**

அரும் சொற்கள் :

அங்கம் - உறுப்பு, பதாகை - கொடி, ஊர்தி - வாகனம், தார் - மாலை, தீட்டப்பட்டு - எழுதப்பட்டு, அலுவல் அகம் - தொழில் நிகழும் இடங்கள், மதி - சந்திரன், அறிகுறி - அடையாளம், ஆற்றல் - வல்லமை, சின்னம் - அடையாளம்.

### கேள்விகள்:

1. தசாங்கங்கள் எவை?
2. மும்மூர்த்திகள், மூவேந்தர் ஆகிய இவர்களுக்குரிய கொடிகள் எவை?
3. பாம்பு, முரசு, அனுமன் - யார் யாருக்குக்கொடியில் சின்னமாக விளங்கின?
4. நம் சுதந்திரக்கொடியில் அமைந்த மூந்நிறங்கள் எவை?
5. அந்நிறங்கள் எவ்வெவற்றைக் குறிப்பனவாகக் கூறுகின்றனர்?
6. 1906, 1921, 1931, 1948 ஆகிய இந்த ஆண்டுகளில் இம் மூந்நிறக்கொடி எவ்வெவ்வாறு மாறுதல் அடைந்தது?
7. எவ்வெக்காலங்களில் நம் தேசியக்கொடியைப் பறக்கவிடவேண்டும்.

### பயிற்சி:

1. மும்மூர்த்திகள், மூவேந்தர்கள் பெயர்களைக் குறிப்பிடு.
2. 1921, 1948 ஆகிய ஆண்டுகளில் மூந்நிறக் கொடி அடைந்த வேறுபாட்டைக் குறிப்பிடு.

### இலக்கணம்:

## சுட்டும், வினவும்

அவன், எப் பையன். இவ்விரண்டு சொற்களின் முன்னுள்ள எழுத்துக்களாகிய அ, எ என்பன எதைக் காட்டுகின்றன. சுட்டுப் பொருளையும் வினப்பொருளையும் காட்டுகின்றன அல்லவா? இவ்வாறு சுட்டுப்

பொருளைக்காட்டும் எழுத்துக்கள், அ, இ என்பன வினைப் பொருளைக் காட்டும் எழுத்துக்கள், ஆ, எ, ஏ, ஓ யா என்பன. 'உ' என்னும் எழுத்தும் சுட்டெழுத்தாகவரும் ஆனால் அடிக்கடி வராது.

அவன்
இவன் } சுட்டு

கந்தனா ஆ
எவன் எ
ஏது ஏ } வினா
முருகனோ ஓ
யார் யா

இச்சுட்டு வினா எழுத்துக்கள் சொல்லுக்கு உள்ளேயே இருந்தால் அகச்சுட்டு, அகவினா என்றும், சொல்லுக்கு வெளியே இருந்தால், புறச்சுட்டு, புறவினா என்றும் கூறுவர்.

அவன்
இவன் } அகச் சுட்டு

அப்பையன்
இப்பெட்டி } புறச்சுட்டு

எவன்
ஏது
யார் } அக வினா

எப் பையன்
கந்தனே
வேலனா
ராமனோ
யாங்ஙனம் } புறவினா

பயிற்சி :

1. இப்பாடத்திலிருந்து சுட்டுப் பெயர்கள் வினாப் பெயர்களை எடுத்து எழுதி அவை இன்ன சுட்டு, இன்ன வினா எனக் குறிப்பிடு.

# 2. அறிவுடை அரசர்

1. மக்களுக்கு இரண்டு அறிவு உண்டு. ஒன்று இயற்கை அறிவு, மற்றொன்று செயற்கை அறிவு. செயற்கையறிவு ஏட்டுக்கல்வி மூலமாக எய்தப் பெறுவது. மற்றொன்றாகிய இயற்கையறிவு பொருள்களைக் கூர்ந்து கவனிப்பதாலும், உலக அனுபவம், மிகுந்து வருவதாலும் ஏற்படுவதாம். இரண்டும் மக்களுக்கு வேண்டற்பாலவை. இவ்விரண்டும் பெற்றவர்களையே உலகம் புகழும். அப்படி இவ்விரண்டையும் பெற்றவர் நம் நாட்டிலும் உண்டு. பிற நாட்டிலும் உண்டு. அவர்களுள் பிற நாட்டில் வாழ்ந்த ஒரு பேர் அரசருடைய நுண்ணறிவுத்திறனை இங்கு அறிந்து இன்புறுவோமாக.

2. உலகம் ஐந்து பெருங்கண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பியா, ஆஸ்டிரேலியா, என்பன. இவற்றுள் ஒன்றான ஆசியாக் கண்டத்திற்கு மேற்பாகத்தில் பாலஸ்தீனம் என்னும் ஒரு சிறு நாடு உள்ளது. இந்நாடு ஒரு சிறந்த புண்ணிய நாடு. ஏனெனில், இங்குத்தான் ஏசுப் பெருமான் அவதரித்தார். பாலஸ்தீனம் புண்ணிய நாடு மட்டும் அன்று. நாகரிகத்திலும், பொருள்நிலையிலும் தலை சிறந்து விளங்கும் நாடுமாகும்.

3. இத்தகைய சீரும் சிறப்பும் படைத்த நாட்டைச் **சாலமன்** என்னும் பெயரிய மன்னர் ஒருவர் ஆண்டுவந்தார். சாலமன் பிறவியிலேயே நுண்ணறிவு பெற்றவர். பிறகு பல நூல்களைப் படித்துக் கல்வி அறிவையும், பெருக்கிக் கொண்டவர். இந்த இரண்டும் இருந்தமையால் இவர் சிறந்த ஞானியாராக விளங்கி

ஞர். ஞானியாரால் ஆளப்படும் அரசைப் பற்றி ஏதே னும் குறை கூறமுடியுமா? இவரது அரசாட்சி மிகவும் சிறப்புடையதாக இருந்தது. இவரிடம் வீரமும் இருந்தது; ஈரமும் இருந்தது. வீரம் காரணமாகப் பல அரசர்களை வென்று தம் நாட்டுடன் அவ்வரசர்களின் நாடுகளை இணைத்துக் கொண்டு, தம் பாலஸ்தீனம் பெரு நாடாக விளங்கும் வண்ணம் அரசு புரிந்து வந்தார். பாலஸ் தீனத்திற்குத் தலைநகராக விளங்கிய ஜெரூஸலத்தில் அரண்மனை வகுத்துத் திறமையுடன் நீதிசெலுத்தி வந் தார். இவர் நீதி ஓரவஞ்சனையின்றித் துலாக் கோல் போல் இருந்தது. தம் அரசில் பொறுக்க வேண்டிய வர்களைப் பொறுத்தும், ஒறுக்க வேண்டியவர்களை ஒறுத் தும் செங்கோல் புரிந்து வந்தார். தம் நல்லரசு தம் மோடே போய்விடாமல், தமக்குப் பின் வருபவர்களும் இதன்படி நடக்கவேண்டும் என்பதற்காகவும், மக்களும் ஒழுக்கம் தவறாது நன்முறையில் நடக்க வேண்டும் என் பதற்காகவும், பரந்த நோக்கம் கொண்டு, நீதி மொழி கள் என்னும் நூலையும் எழுதி உதவினார்.

4. வீரத்திற்கு இந்தப் பணிகளைச் செய்தவர் ஈரத்திற்குச் சிறந்த தொண்டு புரிய வேண்டாவா? தம் நாட்டுத்தலை நகராகிய ஜெரூஸலத்தில் ஒரு பெரிய ஆல யத் திருப்பணி செய்து வைத்தார். மக்கள் கடவுள் அன்புடையவராய் இருத்தல் வேண்டும் என்பது அவரு டைய அவா. ஆண்டவனை அன்புடன் பாடி ஆராதிக் கவும் உத்தம கீதங்கள் என்னும் நூலையும் இயற்றியருளி ஞர். இப்படியல்லவோ மன்னர்கள் இருக்க வேண்டும்? மன்னர் பொருட் செல்வம் மட்டும் பெற்றிருந்து யாது பயன்? அவர்களிடத்தில் கல்விச் செல்வமும் இருத்தல் வேண்டும். அருட்செல்வமும் அமைதல் வேண்டும்.

'நன்னடை நல்கல் வேந்தர்க்குக்கடனே' என்று நம்தமிழ் நூல் கூறுவது எவ்வளவு பொருத்தம் பாருங்கள். இவ்வாறு சாலமன் ஞானியார் நாட்டை ஆண்டுவந்ததால் இவருடைய புகழ் பாரெங்கும் பரவியது.

5. இங்ஙனம் பரவிய புகழ் ஷீபா நாட்டுப் பேரரசியார் செவிக்கும் எட்டியது. அவ்வம்மையார்க்கு இப் பெருமன்னரைக் கண்டு தரிசிக்கவேண்டும், என்னும் அவா எழுந்தது. கற்றுரைக் கற்றுரே யன்றே காணவிரும்புவர். அவ்வம்மையாருக்குச் சாலமன் மன்னரை நேரில் கண்டு, அளவளாவி விட்டு வந்து விடுவதற்கு மட்டும் எண்ணம் கொண்டிலர். 'இவர் பேர் அறிவு படைத்தவர்; நுண்ணறிவுத்திறன் உடையவர்' என்று எல்லோரும் புகழ்ந்து கூறுகின்றனரே. அது எவ்வளவு தூரம் உண்மையாக இருக்கும் என்பதைச் சோதித்தறியவும் உறுதிகொண்டார்.

6. ஷீபா மகாராணியார் ஒரு நல்லநாளில் ஜெருஸலம் நோக்கிப் புறப்பட்டார். புறப்பட்டு வருபவர் ஒரு நாட்டு மகாராணியார் ஆதலின், அரசமரியாதைகளுடன் அவ்வம்மையார் புறப்பட்டார். அமைச்சர் தானைத்தலைவர் உடன் வந்தனர். பொன்னும் மணியும் உடன் கொண்டு ஒட்டகங்களில் ஏற்றி வந்தனர்; இந்தப் புறப்பாட்டுடன் ஜெருசலத்தை யடைந்தனர். சாலமன் மன்னரும் ஷீபா மாநாட்டுப் பேரரசியாரைத் தக்க மரியாதையுடன் வரவேற்றுத் தனியிடம் தந்து இருக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவ்வம்மையாரும் அவ்வாறே இருந்து வந்தனர்.

7. ஒரு நாள் ஷீபா நாட்டு ராணியார் தம்கைகளில் இருண்டு மலர் மாலைகளை எடுத்துக்கொண்டனர்.

அவ்விரண்டினுள் ஒன்று இயற்கையான புத்தம் புதிய ரோஜாமலர்களால் ஆன மாலை. மற்றொன்று ஒரு சிறிதும் வேறுபாடு தெரிந்து கொள்ளமுடியாத நிலையில் இருந்த செயற்கை ரோஜா மலரால் ஆன மாலை. இவ்விரு மாலைகளின் அளவும் ஒன்றே; நிறமும் ஒன்றே; மலர்களின் வடிவமும் ஒன்றே. அம்முறையில் அம்மாலை



கள் அமைந்திருந்தன. பார்வைக்கு இரண்டும் இயற்கை மாலைகளாகவே காணப்பட்டன. தொலைவில் இருந்து பார்ப்பவர் இரண்டும் இயற்கைமாலை என்றே, தடையின்றி இயம்பி விடுவர். ஏன்? அருகில் கண்டும் தம்கை

யில் வாங்கி மூக்கால் முகர்ந்து பார்க்கும்வரை இயற்கை என்றே கூசாது கூறி விடுவர்.

8. இந்த மாலைகளைக் கையில் கொண்ட ஷீபா அம்மையார் சாலமன் மன்னரைக் கண்டனர். கண்டு அரசரைப்பார்த்து, "மன்னரே! நான் மாலைகளைக் கையில் வைத்திருப்பதை நீர் பார்க்கின்றீர். ஆனால், இவற்றுள் ஒன்று இயற்கைமலர்களால் ஆனது. ஏனையது செயற்கைமலர்களால் இணைக்கப்பட்டது. ஆகவே, இவ்விரண்டு மாலைகளுள் எது இயற்கைமாலை? எது செயற்கைமாலை? செப்பும்!" என்று அன்புடன் வினவினர்.

9. சாலமன் மாலைகளை உற்று உற்று நோக்கினர். உண்மையில் அவருக்கு இரண்டும் இயற்கைமாலைகளாகவே காணப்பட்டன. எதை இயற்கை என்பது; எதைச் செயற்கை என்பது என்று அறிந்து கொள்ளச் சிறிது சிந்திக்கவேண்டியவராய் விட்டார். மாலையைக் கையிலும் வாங்கிப்பார்க்கக்கூடாது. அரசர் இருந்த இடத்திலிருந்தே உரைக்கவேண்டும். சாலமன் மன்னர் நுண்ணறிவு படைத்த ஞானியார் என்பது நாம் அறிந்த உண்மையல்லவா?

10. இவர் அரண்மனைக்கு முன்னால் தோட்டம் இருந்தது. அத்தோட்டம் மாஞ்செடிகள் நிறைந்து நல்லமலர்களைப் பெற்று வண்டுகளுக்குப் பெருவிருந்து அளித்துக் கொண்டிருந்தது. ஆகவே, பணியாட்களை ஏவித் தோட்டத்திற்கு நேரேயுள்ள சன்னல் கதவுகளைத் திறக்குமாறு கட்டளையிட்டார். வேலையாட்களும் அவ்வாறே செய்யத் தோட்டத்திலிருந்த சுரும்பினங்கள் ஷீபா அம்மையார் பிடித்திருந்த இயற்கை மலர்

மாலையை மொய்த்துக்கொண்டு ஆரவாரம் செய்யத் தொடங்கின. இதைக்கண்ட சாலமன் மன்னர் கலுக்கென நகைத்து, 'அம்மையாரே! நீங்களே இப்பொழுது எது இயற்கை மலர்மாலை; எது செயற்கை மலர் மாலை என அறிந்து கொள்ளலாம் அன்றோ?' என்று கூறி அச் சபையில் இருந்தவர் நன்கு அறிந்து கொள் ளும்படி தாமே வண்டுகள் மொய்த்தமாலையே இயற்கை மலர் மாலை என்று தம் வாயாலும் விதந்து கூறினர்.

11. ஷீபா அம்மையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "உண்மையில் சாலமன் மன்னர் பெரிய ஞானியார்தாம். இயற்கையறிவு வாய்ந்த ஏந்தல் தாம்; நுண்ணறிவு படைத்த அண்ணல்தாம்" என்று வாயார மனமாரப் புகழ்ந்தார். அங்கிருந்தவர்களும் தம்மரசரை மேலும் கொண்டாடிப் பாராட்டத் தொடங்கினர். ஷீபா அம்மையார் சில நாள் ஜெருஸ லத்தில் இருந்து விட்டுத் தம் ஊர் போய்ச் சேர்ந்தார். மன்னர் பிரானும் தம் நுண்ணறிவுடன் தம்மை சாலமன் ஞானியார் என்று பாரெங்கும்பகர நல்லரசு செய்து வந் தார்.

அரும் சொற்கள் :

எய்தப் பெறுவது - அடையப் பெறுவது, ஈரம் - அன்பு, துலாக்கோல் - தராசுக்கோல், ஒருக்க - தண் டிக்க, திருப்பணி - தொண்டு, அவா - ஆசை, நன் னடை நல்கல் - நல்ல ஒழுக்கங்களைக் கற்பித்தல், பார் - பூமி, தானைத் தலைவன் - சேனைத் தலைவன், நுவன்று - சொல்லி, சுரும்பினங்கள் - வண்டுக் கூட் டங்கள், விதந்து கூறினர் - எடுத்துச் சொல்லினர், அண்ணல் - பெருமையில் சிறந்தவன்.

### கேள்விகள் :

1. பாலஸ்தீனம் எங்குள்ளது? அதன் சிறப்பு யாது?
2. சாலமன் எம்முறையில் அரசுசெய்து வந்தார்?
3. அவர் எழுதிய நூல்கள் யாவை?
4. ஷீபா மஹாராணியார் ஏன் சாலமனைக் காண விரும்பினார்?
5. சாலமன் இயற்கை மாலை இதுதான் என்பதை எப்படி அறிவித்தார்?

### பயிற்சி :

1. ஐந்து கண்டங்களைக் குறிப்பிடு.
2. சாலமன் அரசரின் வீரத்தையும் ஈரத்தையும் குறித்து ஒரு கட்டுரை எழுது.
3. ஷீபா ராணியார் ஜெருசலம் புறப்பட்ட நிலையை விளக்கி எழுது.

### இலக்கணம் :

## குற்றியலுகரம்

கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கு ஈற்றில் நிற்பின், அவ் எழுத்துக்களில் உள்ள உகரம் குற்றியலுகரமாகும். அதாவது குறுகிய ஓசையைப் பெற்ற உகரமாகும். இவையும் நகு, பசு எனத் தனிக் குறிலோடு வாராமல் மற்றைப்படி, பல எழுத்துக்களுடன் வரவேண்டும். பாக்கு, மச்சு, பட்டு, மத்து, மார்பு, வயிறு என்பன உதாரணங்கள்.

இக்குற்றியலுகரம் ஆறு. அவை வன்றொடர், மென்றொடர், இடைத் தொடர், ஆய்தத் தொடர், உயிர்த்

தொடர், நெடிற்றொடர்க் குற்றியலுகரங்கள். குற்றிய லுகரத்திற்கு அயல் எழுத்து என்ன என்பதை அறிந்து தொடர் சொல்ல வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| சக்கு<br>மச்சு<br>பட்டு<br>மத்து<br>பருப்பு<br>காற்று | வன்றொடர் | சங்கு<br>மஞ்சு<br>நண்டு<br>பந்து<br>அம்பு<br>அன்பு | மென்றொடர் |
| நொய்து<br>மார்பு<br>அல்கு<br>போழ்து<br>தெள்கு | இடைத் தெடர் | அஃது<br>இஃது | ஆய்தத் தொடர் |
| | | படகு<br>பலாசு | உயிர்த் தொடர் |
| | | ஆடு<br>சோறு | நெடிற் றொடர் |

மெல்லின மெய்யின் மேல் ஏறிய உகரங்கள் இடையின் மெய்யின் மேல் ஏறிய உகாங்கள் முற்றியலுகரங்களாம்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| கணு<br>தனு<br>தம்மு | மெல்லின முற்றியலுகரம் | பல்லு<br>எள்ளு<br>ஏழு | இடையின முற்றிய லுகரம் |

தனிக்குறிலோடு கு, சு, டு, து, பு, று ஈற்றில் நின்றாலும் முற்றியலுகரமே.

(உ-ம்) நகு, பசு, நடு, அது, தபு, அறு

பயிற்சி:

1. கீழ்வருவனவற்றுள் இன்ன சொல் குற்றிய லுகரம் முற்றியலுகரம் என எடுத்து எழுது.

இரண்டு, அறிவு, உண்டு, ஒன்று, ஏடு, கூர்ந்து, ஒரு, இங்கு, ஐந்து இரு, வென்று, அரசு,

வருத்து, ஒறுத்து, தவறுது, செய்து, என்பது எவ்வளவு, பெறு, பேறு, அது.

2. ஒன்பதாவது பாராவில் காணப்படும் குற்றிய லுகர ஈற்றுச் சொற்களை எடுத்து எழுதி, இன்ன தொடர்க் குற்றுகரம் என்றும் கூறுக.

## 3. வெற்றிலைப் பயிர்


1. தாவர வகைகளுள் வெற்றிலையும் ஒன்று. இது மக்களுள் பெரும்பாலோருக்கு மென்று சுவைக்கும் பொருளாக இருந்து வருகிறது. சிலர் உணவின்றி இருக்க எண்ணங்கொண்டாலும், வெற்றிலை மெல்வதை மட்டும் நிறுத்திக்கொள்ள விரும்புவதில்லை. ஆனால், வெறும் வெற்றிலையை உண்ணமாட்டார்கள். அதனுடன் பாக்கு, சுண்ணும்பு கலந்து மென்று சுவைப்பார்கள். சுண்ணம் வெண்மை நிறமுடையது. வெற்றிலை பசுமை நிறம் வாய்ந்தது. பாக்கோ சில வெண்மையாகவும், சில சாம்பல் நிறமாகவும் இருக்கும். இம் மூன்று வேறுபட்ட வண்ணமுடைய பொருள்களையும் ஒன்றுசேர்த்து மென்றபோது, செம்மை நிறம் தோன்றுகிறது. இஃது ஒரு விந்தை யன்றோ! இந்த வெற்றிலை எவ்வாறு பயிரிடப் படுகிறது என்பதை இனிக் கவனிப் போமாக.

2. தாவரங்கள் பலவகையாகப் பிரிக்கப் படுகின்றன. அவை மரம், செடி, கொடி புல், பூண்டு முதலியன அவற்றுள் கொடி வகையைச் சேர்ந்தது வெற்றிலை. வெற்றிலைக்கொடிகளைத் துண்டுதுண்டாக வெட்டி, அத்துண்டுகளை நட்டுப் பயிர் செய்வர். அக்கொடி நட்ட சின்னாட்

களுக்குப் பின் இலைகளை விடத்தொடங்கும். அவ்விலைகள் தளிர்க்கத்தளிர்க்க அவற்றைக் கிள்ளிக்கொண்டே வருவார்கள். இவ்வாறு செய்யவில்லையானால், இக்கொடியில் அரும்பும் மலரும் நிறைந்து, காயும் பிஞ்சும் கலந்து அழகுறத் தோன்றும். அத்தோற்றம் விளங்கும் அளவுக்குக் கொடியை விட்டுவைத்தால்தானே! வெற்றிலைப் பூப் பொன்னிறமுடன் காணப்படும். காயும் பூவும் பயன்படாமையால், அவை தோன்றும் வரைக்கும் அவற்றை வளரவிடாமல் பயன்படும் இலைகளை மட்டும் கிள்ளி எடுத்துக் கொள்கின்றனர். இக்கொடி மலர், பிஞ்சு காய் முதலியவற்றைத் தாங்கும் பேறு பெறுமல் வெறும் இலையுடன் இருத்தலின், இதற்கு வெற்றிலைக் கொடி என்று பெயர் கொடுத்து வழங்குவது, மிகப் பொருத்தமே யாகும். வெறுமையிலை என்னும் இரு சொற்கள் சேர்ந்துதான் வெற்றிலை என்று சொல்லப்படுகிறது.

3. வெற்றிலைப் பயிருக்கு நல்ல உரம் பொருந்திய தோட்ட நிலங்களே ஏற்றவை. இப்பயிர் எரு மிகுதியாகப் பெற்றும், தண்ணீர் இறைத்தலை இடைவிடாது பெற்றும் வளரவல்லது. வெற்றிலைக் கொடியை நடுவதற்கு நிலத்தைப் பண்படுத்திச் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. நிலத்தைச் சமப்படுத்த வேண்டும். நிலம் மேடும் பள்ளமுமாக இருக்கக்கூடாது. நிலமுழுமையும் ஏறத்தாழ இரண்டடி இடை வெளிவிட்டு, முக்கால் அடி ஆழத்திலும் ஒன்றரையடி அகலத்திலும் கால்வாய்களை வெட்டவேண்டும். இடைவெளியாக விடப்பட்ட இரண்டடி அகலம் கொண்ட இடங்களில், வெட்டியமண்ணைப்போட்டுமேடைகள்செய்யவேண்டும். முக்காலடி ஆழமாகத் தோண்டப்பட்ட கால்வாய்களில்

நீரைப் பாய்ச்சவேண்டும். மேடைகளின் இருமருங்கி லும் இவ்விரண்டு வரிசையாக அகத்தி விதையை விதைத்து அகத்திச் செடியைப் பயிராக்க வேண்டும். ஆக, ஒரு மேடையில் நான்கு வரிசை அகத்திச் செடிகள் வளர்ந்துவரும் என்பது தெரிகிறதல்லவா? மேடை யில் ஓரத்தின் இரண்டு வரிசைகளுக்கு இடை



யில் உள்ள இடத்தைக் கங்கு என்பர். இந்தக் கங்கின் இடைவெளி முக்கால்சாண் அகலம் இருக்கும். ஒரு மேடையில் இரண்டு கங்குகள் அமைந்திருக்கும். கால் வாய் நீரை இந்த அகத்திச் செடிகளுக்கு இறைத்து அவற்றை வளரச் செய்வர். சேற்று மண்ணைக் கொண்டு மேடைகளின் இரு பக்கங்களையும் மெழுகிப் புல் பூண்டு முளைக்காமல்படி கவனித்து வருவர். கங்குகள் நீங்க லாக மற்றும் இடையில் வெளி இருக்குமல்லவா? அந்த

இடங்களில் இடைவிட்டு இடைவிட்டு வாழை, கத்தரி வெண்டை முதலியவற்றையும் பயிராக்குவர். அகத்திச் செடி ஏறக்குறைய இரண்டரை மூன்றடி உயரத்திற்கு வளர்ந்ததும், வெற்றிலைக் கொடிகளைத் துண்டு துண்டுகளாக வெட்டிக் கங்கு என்று கூறப்படும் இடங்களில் நட்டு விடுவார்கள். கால்வாய்களில் நீரைப் நிரப்பி அவற்றின் மூலம் நீரை வெற்றிலைக்கொடிக்கு இறைத்து வர வேண்டும். தண்ணீர் இறைக்க இறைக்க வெற்றிலைக் கொடி நன்கு செழித்து வளரும். அப்படி வளர்ந்து வரும் கொடியை, ஓர் ஆளின் இடுப்பளவுகளுக்கு வளர்ந்துள்ள அகத்திச் செடியின் மீது படரவிட வேண்டும். தண்ணீர் இறைத்து விட்டால் மட்டும் போதாது. வெற்றிலைக் கொடிகளுக்கு அடியில், மாட்டுச்சாணம் ஆட்டுப்பிழுக்கை பன்றியெரு ஆகிய எருக்களைப் போடவேண்டும். இவ்வாறு எரு வைட்டப்பட்டு வெற்றிலையும் அகத்தியும் நன்கு செழித்து வளர்ந்துவரும். அகத்திச் செடிகள் ஆள் உயரத்திற்கு மரமாக வளர்ந்ததும், அவ்வகத்தி மரங்களை அடுத்தமேடையின் ஓரத்தில் வளர்ந்திருக்கும் அகத்திமரங்களுடன் இணைத்துக் கட்டுவர். இப்படி இணைப்பதற்கு இவ்விரு அகத்திமரத் தொகுதிகளுக்கு இடையில் பட்டைஉரிக்கப்பட்டுக் காய்ந்து கனமற்று இருக்கும் அகத்திமரங்களைக் குறுக்கில் வரிசையாக வைப்பர். அவை கீழேவிழாதபடி அகத்திமரம், முருக்கு மரங்களை முட்டுக் கொடுத்துக் கட்டிவிடவேண்டும். இவ்வாறு கட்டப்பட்டபோது அகத்திமரங்களின் மேற்பாகம் ஒரேபந்தல்போல் காணப்படும். கீழே கால்வாய் நீருடன் நிறைந்திருக்கும். இந்த அகத்தி மரங்களில் தான் வெற்றிலைக் கொடி படர்ந்து வளர்ந்துவரும்,

இவ்வளவு செயல்களைச் செய்தால் மட்டும்போதாது. இக்கொடியைக் காப்பாற்றுதற்கு நிலத்தைச் சுற்றிலும் வேலியமைக்க வேண்டும். இவ்வேலியினை இருகாரணங்களுடன் அமைப்பர். ஒன்று காற்று மிகுதியும் இவ்வெற்றிலைப் பயிருக்குக் கூடாமையினாலும், மற்றொன்று ஆடுமாடுகள் மேயாதிருக்கும் பொருட்டும் ஆகும். இவ்வேலிகள் அகத்திமரங்களாலும், முருங்கமரங்களாலும் வாழைச் சருகுகளாலும் அமைந்தவை.

4. இந்த வெற்றிலை இந்த வண்ணமாகப் பயிரிடப்பட்டபின் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து பலனளித்து



வரும். முதல் முதல் தோன்றும் இலையை இளங்கால் வெற்றிலை என்பர். அடுத்தபடி வெளிவரும் வெற்றிலை முதுகால் வெற்றிலை எனப்படும். இளங்கால் வெற்றிலை மிக்க பசுமையும், தடிப்பும் உள்ளதாய் இருக்கும். முதுகால் வெற்றிலை வெளுப்பும் மென்மையும் பொருந்தியிருக்கும். வெற்றிலையில் பலவகை உண்டு. அவை வெள்ளைவெற்றிலை, பச்சைவெற்றிலை, கற்பூரவெற்றிலை, காரவெற்றிலை என்பன. பேருக்கு ஏற்ற குணம் இவ்

வெற்றிலையில் பொருந்தியிருப்பதால், இதற்கு இப்பெயர்கள் அமைந்திருக்கின்றன. கற்பூரவெற்றிலை கற்பூர மணமும், விறுவிறுப்புக் குணமும் கொண்டிருக்கும். கார வெற்றிலை காரமுள்ளதாக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? இவ்விரு வெற்றிலைகளும் மருந்துக்கு மிகுதியும் பயன்படக் கூடியவை. ஏனையவகையான வெற்றிலைகள் மக்கள் சுவைத்து மெல்லக் கூடியவை. வெற்றிலையை அடிக்கடி பார்க்கும் உங்களுக்கு அதன் வடிவத்தைப் பற்றிக் கூறவேண்டுமோ? அது வேலைப்போன்று, முனை கூர்மையுடையதாகக் காணப்படும். அகன்று நீண்டுள்ள வெற்றிலைகளும் உண்டு.

5. இவ் வெற்றிலை நம் நாட்டில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது. இலங்கைத் தீவும், மலையாளமும் இப்பயிரை மேற்கொண்டிருக்கின்றன. அவ்விடங்களில் வெற்றிலைக்கெனத் தனியிடங்களை நாடமாட்டார்கள். தம் வீட்டுக்கு முன்புறமேனும் பின்புறமேனும் காலியிடங்கள் இருந்தால், அங்கெல்லாம் பயிரிட்டு விடுவர். மேலும், நம் தமிழ் நாட்டில் உழவர்கள் செய்யும் செயல்கள் யாவும் செய்யாமல் கொடியைமட்டும் நட்டுவிடுவர். அந்நாடுகள் மழைமிகுதியும் பெற்று விளங்கும் நாடுகளாதலின், அம்மழை நீரால் வளர்ந்து நல்லபயனை நல்கிவரும். இங்கு வளரும் வெற்றிலை, இரண்டு கை அகலமுள்ளதாக இருக்கும்.

6. வெற்றிலை மங்கலப் பொருள்களில் ஒன்று. கடவுள் பூசைகளிலும் திருமணக் காலங்களிலும் இது பெரிதும் வேண்டற் பாலதாக இருக்கின்றது. கலியாணத்தில் வருகிறவர்களுக்கு வேறு எந்தப் பொருளைக்

கொடுத்து உபசரிக்காவிட்டாலும், வெற்றிலையைக் கொடுத்தே ஆகவேண்டும். இதுமுதல் மரியாதையாகும். வெறும் வெற்றிலையைக் கொடுக்கமாட்டார்கள். உடன் பாக்கையும் வைத்துக் கொடுப்பார்கள். வீட்டிற்கு வந்தாலும் அவர்கள் முன்பு வெற்றிலைப் பெட்டியைத் திறந்து வைத்துப் போட்டுக்கொள்ளுமாறு வேண்டும் வழக்கம் இன்றும் நம் நாட்டில் உண்டு. உணவு கண்டபின் இதனை இந்தியர், இலங்கை வாசிகள், பர்மியர், மலையாளிகள் பெரும்பான்மையும் மென்று சுவைக்கின்றனர். மற்ற நேரங்களிலும் தின்பர். வெற்றிலையுடன் இலவங்கம், ஏலக்காய் சாதிக்காய் முதலிய வாசனைப் பொருள்களையும் சேர்த்து மெல்லுவர்.

7. வெற்றிலை இத்துணைச் சிறந்த பொருளாக இருப்பதனால்தான், இதற்கு மெல்லிலை, வெள்ளிலை, தாம்பூலம், முதலிய சொற்கள் அமைந்திருக்கின்றன. இதன் சுவையை நன்கு உணர்ந்த நம்மாழ்வார் கண்ணனைப் புகழ்கையில் 'உண்ணும் சோறும் பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்', என்று பாடிக் களித்துள்ளார். ஆகவே இவ்வெற்றிலைப் பயிரை மேலும் மேலும் வளர்த்து நல்ல ஊதியத்தைப் பெறவேண்டும்.

அருஞ் சொற்கள் :

சுண்ணம் - சுண்ணாம்பு, வண்ணம் - நிறம், உரம் - வன்மை, மருங்கு - பக்கம், சருகு - உலர்ந்தஇலைகள், நல்கி - கொடுத்து, ஊதியம் - வருவாய்.

கேள்விகள் :

1. வெற்றிலை எவ்வெவ்வாறு பயிரிடப்படுகிறது?
2. வெற்றிலைப் பயிரோடு எவை எவை பயிரிடப்படுகின்றன?

3. எத்தனை வகையான வெற்றிலைகள் இருக்கின்றன ?

4. இப் பயிர் எங்கெங்கு மிகுதியாகப் பயிரிடப்படுகின்றது ?

5. வெற்றிலை எவ்வெவ்வாறு பயன் படுகிறது ?

பயிற்சி :

1. கங்கு, இளங்கால் வெற்றிலை, முதுகால் வெற்றிலை இவைகளைப்பற்றிச் சிறு குறிப்பு எழுது.

2. இலங்கைத்தீவும், மலையாளதேசமும் இப்பயிரைப் பயிரிடும் முறையை விளக்கி எழுது.

## இலக்கணம் :

### மாத்திரை

அ, ஆ என்னும் இவ்விரண்டு எழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். இரண்டிற்கும் ஓசையில் வேறுபாடு தெரிகிறதா? இவ்வாறு எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு மாத்திரை என்று இலக்கணத்தில் கூறப்படும். இயல்பாகக் கண்ணிமைக்கும் நேரமும், கைந்நொடிக்கும் நேரமும் ஒரு மாத்திரைக்கு அளவாகும்.

மெய்யெழுத்துக்களும், ஆய்த எழுத்தும், குற்றியலுகரமும், குற்றியலிகரமும், அரை மாத்திரையுடையன. குறிலுக்கு ஒரு மாத்திரை; நெடிலுக்கு இரண்டு மாத்திரை.

பயிற்சி :

1. கடைசிபாராவில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் மாத்திரை அளவைக் குறிப்பிடுக.

# 1. எனது கேளிக்கைப் பிரயாணம்

## (மகாபலிபுரம்)

'கணபதி விலாஸ்'
தாண்டவாச்சாரி வீதி,
புரசைவாக்கம்,
சென்னை, 17-10-'51

1. அன்புள்ள மாமா அவர்கட்கு வணக்கம். இவ்விடம் யாவரும் நலம். உம்முடைய நலம் அறிய ஆவல். குமரு பள்ளிக்கூடம் செல்கின்றானா? அதையும் எழுதவும். நான் அடுத்த கோடை விடுமுறைக்கு அங்கு வருகின்றேன். மாமிக்கு இச் செய்தியை அறிவிக்கவும். இது நிற்க, நானும் என் பள்ளிக்கூட நண்பர்களும் எங்கள் வகுப்பு ஆசிரியருடன் மகாபலிபுரம் சென்றோம். அதன் சிற்ப ஓவியத் திறனை நான் என்னென்று உமக்கு எடுத்து எழுதப்போகிறேன்! என்றாலும், நான் குறித்துக் கொண்ட குறிப்பிலிருந்து சிலவற்றை எழுதுகிறேன். நீரும், மாமியும், குமரும் தாமதம் செய்யாமல் ஒரு நாளைக்குப்போய் பார்த்துவிட்டு வரவும்.


2. நான் படிக்கும் ஏழாவது வகுப்பில் நாற்பது பிள்ளைகள் வாசிக்கின்றனர். அவர்கள் யாவரும் எங்கள் கேளிக்கைப் பயணத்தில் கலந்து கொள்ளவில்லை. இருபது பிள்ளைகள் மட்டும்தான் இப்பயணத்தில் கலந்து கொண்டனர். போன சனிக்கிழமை காலை நாங்கள் இருபத்தொரு நபர்களும் சென்னைக் கோட்டை வெளியில் இருந்து புறப்படும் பஸ்ஸில் ஏறி, மகாபலிபுரத்தையடைந்தோம். மகாபலிபுரம் கடற்கரை ஓரத்தில் அமைந்த பட்டினம். ஊருக்கும் கடற்கரைக்கும் ஏறக்

குறைய இரண்டு பர்லாங் தொலைவுதான் இருக்கும். இது பல்லவர் அரசுபுரிந்த காலத்தில் துறைமுகமாக இருந்த பட்டினமாகும். மகாபலிபுரம் மாமல்லபுரம் என்றும் கூறப்படும். இப் பெயரை இதற்குச் சூட்டி மகிழ்ந்த மன்னன், 'மாமல்லன்' என்பவன். இவன் பல்லவ மரபினன். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிமா நகரைத் தலைநகரமாகக் கொண்டு, அரசாண்டவன். இங்குள்ள திருமால் கோயில் திருமங்கை யாழ்வாரால் பாடப்பட்டது. இவ்வாழ்வார் இத் தலத்தைத் திருக்கடல்மல்லை எனச்சுட்டியுள்ளார். இப்பொழுது காட்சியளிக்கும் இப் பட்டினம் முழுத்தோற்றத்தைப் பெற்றதன்று. இதன் பழைய தோற்றப் பொலிவு பெரிதும், கடலால் கொள்ளப்பட்டது. கடல் கொண்டது போக, எஞ்சியுள்ள பகுதிகளையே நாம் இன்று கண்டு மகிழ வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

3. மகாபலிபுரத்தைக் காண விழைவதன் இன்றியமையாத நோக்கம் யாதெனில், அங்குள்ள சிற்பங்களைக் கண்டு களித்தற்கும், கற்கோயில்களைப் பார்த்துப் பரவசமுறுதற்குமே யாகும். அங்கு ஐந்து கற்றளிகள் இருக்கின்றன. அவை ஐந்தாக இருப்பதனால், அவற்றைப் பஞ்சபாண்டவர் கோயில்கள் என்று கூறுகின்றனர். அப்படிக் கூறுவதற்குத் தக்க ஆதாரம் இல்லை என எங்கள் ஆசிரியர் கூறினர். அவர் சரித்திரம் நன்கு கற்றவர். அக் கற் கோயில்கள் மகேந்திரவர்ம பல்லவனாலும், அவன் மகன் நரசிம்மவர்ம பல்லவனாலும் கற்களைக் குடைந்து கட்டப்பட்டனவாகச் சரித்திர வரலாறு அறிவிக்கின்றது. இவை தனித்தனியே கற்பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்டன என்ப

தைக் கேட்குந்தோறும், காணுந்தோறும் வியக்காமல் இருக்க முடியவில்லை.

4. இவ்வைந்து கற் கோயில்களுள் பெரியதாய் இருப்பதைத் தருமர் கோயில் என்கின்றனர். இது மூன்றுவாயில் நிலைகளைக் கொண்டது. இதில் காணப் படும் ஓவியத்திறனைச் சென்று கண்டால் அன்றி, எழுத்




தால் எழுதி விளக்க இயலாது. இரண்டாம் அடுக்கின் நடுப்பாகத்தின் கீழ்ப்பகுதியில் பார்வதி பரமேஸ்வரர் குமாரக்கடவுளோடு வீற்றிருக்கும் முறையில் ஒரு விக்கி ரகம் செதுக்கப்பட்டிருக்கிறது. இதனைச்சோமாஸ் கந்த மூர்த்தி என்கின்றனர். தருமர் இரதத்திற்கு அடுத்தாற் போல் இருப்பது பீமரதம். அதற்கும் அடுத்தபடி உள்ளவை காண்டீபன் தேரும், பாஞ்சாலியின் இரதமும் ஆகும். இங்குக் கரியின் உருவமும், அரியின் வடிவமும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். திரௌபதியின் இரதம் என்பது துர்கையின் கோவிலே அன்றி வேறன்று.

வகுல சகாதேவர் இரதங்கள் என்பன முற்ற முடிய அமையப் பெறுமல் அரைகுறையான வேலைப்பாடுடன் காணப்படுகின்றன. துர்க்கையின் கற்கோயிலுக்கு முன் புறத்தில் ஒரே சிலையில் செதுக்கப்பட்ட கைம்மாவின் வடிவத்தைக் காணலாம். இவற்றை எல்லாம் உன்னிப் பாகப் பார்த்து வருவதற்குள், எங்கள் கால்கள் கடுக்கத் தொடங்கின. ஆகவே, 'மிகுதியான பாகங்களை நாளைக்குப் பார்ப்போம்' என்று முடிவு கட்டிக்கொண்டு, சிறிது நேரம் கடற்கரைமணலில் அமர்ந்து உரையாடிவிட்டு, இரவு உணவுகொண்டு உறங்கினோம்.

5. மறுநாள் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, எஞ்சியுள்ள பகுதிகளைக் காணப் புறப்பட் டோம். வெயில் ஏறிவிட்டால், ஒன்றையும் சரிவரக் காண இயலாமற் போகுமென்று, காலை ஆறரை மணிக் கெல்லாம் வெளியே புறப்பட்டோம்.

6. ஐந்து கற்கோயில்களுக் கப்பால் கண்ட காட்சி பகீரதன் தவத்தைக் குறிக்கும் சிற்பக் காட்சி யாகும். இக்காட்சியடங்கிய கற்சிலையானது இருபத் தொன்பது கெஜ நீளத்திலும் பத்து கெஜ அகலத் திலும் இருந்தமையால், இத்தவக் காட்சியே அன்றி, வேறு பலவகைப்பட்ட ஓவியக்காட்சிகளும் இருந்தன. இத்தகைய நீளமான கல்லில் மக்கள் தேவர், விலங்கு முதலியவர்களின் உருவங்கள் காணப்படுகின்றன. இரு பக்கங்களிலும் பெரிய பாறைகள் அடைப்பட்டிருக் கின்றன. இவற்றிற்கு இடையே ஒரு பிளவு காணப் படுகின்றது. அப்பிளவில் நாகர்களும் நாகக்கன்னியர் களும் வடிக்கப்பட்டிருக்கின்றனர். அப்பிளவின் வழியே

மழை பெய்யுங்காலத்து நீர் பாயும் இடைவெளி ஒன்று இருக்கிறது. பிளவுக்கு வடபால், ஒரு மாதங்கம் அப்பிளவுக்கு நேரே தன் கரத்தை நீட்டிக்கொண்டு இருப்பதையும், அதற்குப் பின்பக்கமாக மற்றொரு வேழம் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கும் காட்சியைக்காணும் போது, சிற்பியின் கைவன்மை



யைப் புகழாமல் இருக்க இயலாது. இதன்பின் கிருஷ்ணன் கோவர்த்தனகிரியைத் தன் கையால், ஏந்திக் குடைபோல் பிடித்துக்கொண்டு, ஆக்களையும் ஆயர்களையும் மழைப்பொழிவிலிருந்து காத்து நிற்கும் சிற்பத்தைக் கண்டோம். துர்க்கா தேவியின் தோற்றமும்


அங்குத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அத்துர்க்கை தன் எட்டுத் தோள்களுடன் அரிமா மீது அமர்ந்து, மகிடா சூரனைப் போரிட்டு அடக்கி ஆளுவது போல் செதுக்கப் பட்டிருக்கும் சிற்பம், எவருடைய கண்ணையும் கருத்தை யும் கவர வல்லதாய் இருக்கிறது. துர்க்கா தேவியின் சிற்பத்திற்கு எதிரே, திருமால் பாம்பணை மீது பள்ளி கொண்டிருக்கும் முறையில் அமைந்துள்ள வடிவமும், தேவர்கள் வேண்டுகோளையும் வழிபாட்டையும் ஏற்று நிற்கும் நிலையில் ஆதி வராக அவதாரக் கோலத்துடன் விளங்கும் திருமாலின் உருவமும், மூவடி மண் வேண்டி மூவுலகையும் அளந்ததோடு நில்லாமல், மாவலியின் சென்னி மீதும் திருவடி வைத்து அடிமை கொண்ட விக்ரம அவதாரத் தோற்றமும் அங்கு இன்னும் மகிழ் ஊட்டும் சிற்பக் காட்சிகளாகும்.

7. இன்னோரன்ன காட்சிகள் நேரில் கண்டால் அன்றி, எழுத்தில் எழுதிக் காட்ட ஒண்ணாதவை. நீயும் மாமியும் எவ்விதமேனும் சென்று காண்பது சாலவும் பயனுடையதாகும். வேண்டுமானால் யானும் உம்முடன் வருகின்றேன். வந்தால் நான் கண்டவற்றை உமக்கும் கூறிக்கொண்டே வருவேன்.

8. மகாபலிபுரத்தின் கடற்கரை ஓரம் கற்பாறை கள் நிறைந்து காணப்படுவதால் கப்பல்கள் வெகு விழிப்புடன்செல்ல வேண்டி அங்குக்கலங்கரைவிளக்கம் ஒன்றை அமைத்திருக்கின்றனர். கடற்கரைக் கோவி லும் அங்கு இருக்கிறது. அவற்றையும் அங்குச் சென்றால் காணலாம்.

9. ஊர் அத்துணை வளமுடையதாகக் காணப்பட வில்லை. இரண்டொரு நாள் வசதியாகத் தங்குவதற்

சூரிய இடவசதியும் குறைவு. அப்படித்தங்க வருபவர் தமக்குத் தேவையான பொருள்களுடன் வந்தால் அன்றிச் சௌகரியமாகத் தங்கிச் செல்ல இயலாது. அதனால் தான் அங்குவருபவர் இக் காட்சிகளைக் கண்டவுடன் திரும்பிவிடுகின்றனர்.



10. இம் மகாபலிபுரத்தை அடைய பல மார்க்கங்கள் இருக்கின்றன. சென்னை எழும்பூரில் இரயில் ஏறிச் செங்கற்பட்டை யடைந்து, அங்கிருந்து திருக்கழுக்குன்றத்தை யடைந்து, அங்கிருந்து ஜட்கா வண்டியில் செல்லலாம். திருக்கழுக்குன்றத்திற்கும் மகாபலிபுரத்திற்கும் ஒன்பது கல் தொலைவாகும். திருப்போரூரை யடைந்து, அங்கிருந்து கூண்டு வண்டியின் மூலமும் மகாபலிபுரத்தை அடையலாம். சென்னையில் நேர் பஸ் ஏறியும் இங்கு வந்து சேரலாம். இவ்வசதிகளோடு, சென்னை அடையாற்றை யடுத்துள்ள பலகைவாராவதியில் படகு ஏறியும் இங்கு நேரேபோய்ச் சேரலாம்.

இதற்குமேல் நான் ஒன்றும் மகாபலிபுரத்தைப் பற்றி உமக்கு எழுத வேண்டியதில்லை என எண்ணுகிறேன்.

11. நாங்கள் ஞாயிற்றுக் கிழமை இரவு படகு ஏறிச் சென்னையை வந்தடைந்தோம். வணக்கம்.

இங்ஙனம்
உம் அருமை மைத்துனன்
கண்ணன்.

திரு. தட்சணாமூர்த்திப் பிள்ளை
16, கடை வீதி
அரக்கோணம்

அருஞ் சொற்கள்:

மரபினன் - வம்சத்தைச் சார்ந்தவன், எஞ்சியுள்ள - மிகுந்துள்ள, விழைவது - விரும்புவது, பரவசமுறுதல் - மகிழ்தல், தளிகள் - கோவில்கள், குடைந்து - தோண்டி, காண்டீபன் - அர்ச்சுனன், கரி - யானை, அரி - சிங்கம், கைம்மா - யானை, கடுக்க - நோவ, சிலை - மலை, வடிக்கப்பட்டு இருக்கின்றன - செதுக்கப்பட்டு இருக்கின்றன, மாதங்கம், வேழம் - யானை, ஆக்கள் - பசுக்கள், வராகம் - பன்றி, மூவுலகு-மண், விண், நாக உலகங்கள், விழிப்புடன் - எச்சரிக்கையுடன், மார்க்கங்கள் - வழிகள்.

கேள்விகள்:

1. மகாபலிபுரத்தில் காணக்கூடிய ஐந்து ரதங்கள் எவை?

2. அங்கு எவ்வெச் சிற்பங்களைக் காணலாம்?

3. 29 கஜ நீளத்திலும் 10 கஜ அகலத்திலும் அமைந்த கற்கிலையில் காணப்படும் சிற்பங்கள் எவை?

4. இவ்வூருக்கு மாமல்லபுரம் என்று பெயரைச் சூட்டியவன் யாவன்?

### பயிற்சி:

1. யானைக்குரிய சொற்களை எடுத்து எழுது.
2. துர்க்கை வடிவம், சோமாஸ்கந்தமூர்த்தி அமைந்துள்ள தோற்றத்தைக் குறிப்பிடு.
3. மகாபலிபுரம் நிலவளத்தைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.
4. நீ சென்ற ஊர் ஒன்றன் இயல்பைக் குறித்துக் கட்டுரையாக எழுது

### இலக்கணம்:

## இடு குறிப்பெயரும், காரணப் பெயரும், பொதுப் பெயரும்

'நாற்காலி' என்று எதைக் கூறுகிறோம்? நான்கு கால்களுடைய ஒரு பொருளை அல்லவா கூறுகிறோம். எதனால் அதற்கு அப்பெயர் கொடுக்கப் பட்டது? அது நான்கு கால்களைப் பெற்றிருப்பதனால் அல்லவா? அப்படிக் காரணத்தோடு வைக்கப்பட்ட பெயர்கள் காரணப் பெயர் எனப்படும்.

'மரம்' என்னும் பொருளுக்கு ஏன் அப்பெயர் வைக்கப்பட்டது? ஏன் வைக்கப்பட்டது என்பதை யாராலும் கூறமுடியாது. இவ்வாறு காரணமில்லாமல் நெடுங்காலமாக ஒரு பொருளுக்கு இடப்பட்ட பெயரை இடு குறிப் பெயர் என்பர்.

அவன் தான் ஆது தான், அவர் தாம், அவை தாம், அவர்கள் எல்லாம், அவைகள்எல்லாம் என்று காட்டப் பட்ட இவ் வுதாரணங்களுள் தான், தாம், எல்லாம் என் னும் சொற்கள் உயர்திணை சொற்களோடும் அஃறிணைச் சொற்களோடும் சேர்ந்து வந்துள்ளன அல்லவா? ஆகவே இவற்றைப் பொதுப் பெயர்கள் என்பர். தன்மைப்பெயர் களும் முன்னிலைப் பெயர்களும் கூடப் பொதுப் பெயர் களாம்.

பயிற்சி :


1. கோயில், பாண்டவர், கல், காண்டீபன், மழை, வேழம், ஆ, ஆயர், பாம்பு, மண், கப்பல் - இவை இன்ன பெயர்கள் என எழுதிக் காட்டு.
2. இடுகுறிப்பெயர் காரணப் பெயர்கட்குத் தனித் தனி மும்மூன்று உதாரணம் கொடு.

## 5. இயந்திரமும் சர்க்காவும்

### (உரையாடல்)

**இயந்திரம் :**—நண்பா! நான் ஒருபாவத்தையும் செய்வ தில்லை. என்றாலும்,காலஞ்சென்ற உலகம்போற்றும் உத்தமராய் விளங்கிய மகாத்மா காந்தியடிகளார் என்னை ஏன் வெறுத்துவந்தாரோ தெரியவில்லையே அவர் வேண்டுதல் வேண்டாமை இலாத மகான் அவர் எந்தத் தொழிலையும் இழிவாக எண்ணும் இயல்பை அறவே ஒழித்தவர். அத்தகைய பேரறி வாளர் என்னை ஏன் வெறுத்துவந்தாரோ அறி யேன். சர்க்கா நண்பா! உனக்குஏதேனும் காரணம் தெரியுமோ? தெரிந்தால் கூறு கேட்கிறேன்.

சர்க்கா :—தோழா ! எல்லோரையும் வேறுபாடு கருதாமல் ஒரு படித்தாகக் கண்டு பழகும் பெரியவரான காந்தியாரோ உன்னை வெறுப்பார் ! நீ எங்கள் இந்திய நாட்டிற்குத் தேவையில்லை என்று கருதி வந்தனரே அன்றி, உன்னை வெறுத்து வந்திலர்.



இயந்திரம் :—நான் என்ன அப்படிக் குற்றம் செய்துள்ளேன்? அவர் இந்தியாவுக்குத் தேவையற்றவனாக என்னை ஏன் நினைத்துவிட்டனர்.

சர்க்கா :—ஆ ! அப்படிக்கேள் அறிவிக்கிறேன். நீ ஒரு சில முதலாளிகள் கைக்கு ஆளாகின்றாய். அம் முதலாளிகள் உன்னைக் கொண்டு பெருவாரியான வருவாய் தேட, ஒரு சில தொழிலாளர்களை மட்டும் வேலையில் அமைத்து, அவர்கட்கும் போதுமான ஊதியம்

கருதலின்றி, அரைவயிற்றுக் கஞ்சிக்கும் அல்லலுறும் நிலையில் வேலை வாங்குகின்றனர். பலருக்கு வேலை கிடைப்பது அரிதாய் இருக்கிறது. இதனால், பல குடும்பங்கள் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் கவலையுறுகின்றன.

**இயந்திரம்** :—பலபேர் வேலை இல்லாமல் வேதனைபடுதற்கும், அவர்கள் பசியால் வாடுதற்கும் நான் எப்படிக் காரணமாவேன்? 'அவர்களை எல்லாம் வேலையில் அமர்த்தாதீர்' என்று முதலாளிகளிடம் சொல்லிக் கொண்டு வருகின்றேனா? ஏன் இப்படி என்மேல் பழியினைச் சுமத்துகின்றாய்?

**சர்க்கா** :—உன் நிலையைப்பற்றி நீயே சிந்தித்துப் பார். பலர் செய்யக்கூடிய வேலையை நீயே செய்ய முன்வந்துவிடுகிறாய். அப்படி இருந்தால் முதலாளிகள் பலபேர்களைத் தொழிலில் ஈடுபடுத்தி அவர்கட்கு ஊதியம் கொடுத்து உதவ முன்வருவார்களா? குறைந்த கால அளவில், நிறைந்த ஊதியம் பெற வேண்டுமென்னும் பேராசைக்காரர்கள் அல்லரோ அம் முதலாளிகள்!

**இயந்திரம்** :—ஆஹா! அப்படிச்சொல்லு. நான் குறைவான நேரத்தில் நிரம்ப வேலைசெய்வது, என்னிடம் அமைந்த தனிப்பெரும் பண்பு. இதனால்தான் என்னை முதலாளிகள் விரும்புகின்றனர்.

**சர்க்கா** :—நீயே உன்னைப் பெருமைப் படுத்திக்கொள்வதில் பயனில்லை. நீ முதலாளிகளைக் குறைவான ஆட்களை வைத்து வேலைவாங்க வழிகாட்டுகிறாய் என்பது உன் பேச்சிலிருந்து விளங்குகிறதல்லவா? ஒரு தொழிற்சாலைக்குக் குறைவான ஆட்கள்

தேவை இருப்பதால், வேலையில்லாமல் வேதனை படும் வேலையாட்கள் தொகை பெருகி, ஒருவர்க்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு, குறைந்த ஊதியம் பெற்றேனும் தம்வரையில் காலந்தள்ள எண்ணுகிறார்கள் அல்லவா? மற்றவர்கள் பட்டினி கிடந்து பரிதபிக்கவேண்டியதுதானே? உன்னால் எத்தனை தீங்குகள் விளைகின்றன என்பதைச் சிறிது சிந்தித்துப்பார். அப்படிப்பட்ட உன்னைக் காந்திப் பெரியார் இந்தியாவிற்கு வேண்டா என்று சொன்னதில் கருத்து வேற்றுமை என்ன இருக்கிறது?

**இயந்திரம்:**—தொழிலாளர்களின் போட்டிக்குக் காரணம் நான் எப்படியாவேன்? இது என் குற்றம் அன்று. ஏன் உழைப்பாளிகள் குறைந்த ஊதியத்திற்கு ஒப்புக்கொள்ளவேண்டும்? இவர்கள் யாவரும் ஒன்றுகூடி, ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு, இந்த வேலையை எவர் செய்தாலும் இவ்வளவு கூலிகொடுத்தே தீரவேண்டும் என்று ஏன் கூறக்கூடாது. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு' என்னும் அமுத மொழியை ஏன் அவர்கள் சிந்திக்கக் கூடாது? சிந்தித்து அதன்படி நடக்கக் கூடாது. முதலாளிகளின் வரவைத் தக்கபடி பங்கிட்டு உதவுமாறு, ஏன் முதலாளிகளையே கேட்கக் கூடாது?

**சர்க்கா:**—நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லை. சொல்லுவதை விளக்கமாகக் கூறு.

**இயந்திரம்:**—முதலாளிகள் ஒரு தொழிற்சாலையை அமைக்க வேண்டுமானால், அதற்கு முன்பணம்

வைக்கிறார்கள் அல்லவா? அம்முதற்பணம் இல்லையானால் தொழிற்சாலை எங்கே? நான் எங்கே? தொழிலாளர் தாம் எங்கே? ஆகவே, முதற்பணம் இன்றியமையாதது. ஆதலால், அம்முதற் பணத்திற்குரிய நியாய வட்டியை முதலாளிகள் எடுத்துக் கொள்ளட்டும். முதலாளிகளே தொழிற்சாலைகளில் இருந்து வேலை பார்த்தால், அதற்குரிய ஊதியமாகத் திங்கள் தோறும் எடுத்துக் கொள்ளட்டும். மிகுந்த வருமானத்தைப் பணிபுரிவோரின் வேலைக்குத் தக்கபடி பங்கிட்டுக் கொடுத்து வந்தால் 'குறைந்த ஊதியம் பெறுகிறோம்' என்று கூலியாட்கள் கூக்குரல் இடமாட்டார்கள் அல்லவோ? 'முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்துக் கொண்டு போகிறார்கள்' என்று குறை கூற மாட்டார்கள் அல்லவா?

**சர்க்கா**:— இயந்திர நண்ப! நீ கூறுவது ஒழுங்காகத் தான் இருக்கிறது. 'பந்திக்கு முந்திக் கொள்' என்பது போல முந்திக் கொண்டு வேலையில் அமர்ந்தவர்களுக்கு நீ கூறும் திட்டம் பயனளிக்க வல்லது தான். ஆனால், வேலையின்றி வருந்துபவர் கதி யாதாவது? அவர்கட்கு எப்படி உதவுவது? அதற்கு ஒரு வழி காட்டு நீ.

**இயந்திரம்**:— சர்க்காத் தோழனே! நீ பணியாளர் பக்கமாக நின்று இவ்வளவு பாடு படுவது குறித்து நான் மனம் மிக மகிழ்கின்றேன். அவர்கட்கும் வழி வகைகளை வகுக்கலாம். மனம் இருந்தால் மார்க்கமும் இருக்கும் அல்லவா? ஒரே ஆள் பல மணி நேரங்களாக வேலை செய்வதைக் குறைத்துச் சில மணி நேரங்களே வேலை செய்யத் திட்டம் ஏற்

படுத்தினால், பல பேர்களைத் தொழிற் சாலைகளில் அமர்த்தி வேலை கொடுக்கலாம் அல்லவா? திட்டமான கூலியையும் வகுத்துவிட்டால், 'ஒரு தொழிற் சாலையில் அதிகம் கொடுக்கின்றனர். மற்றொரு தொழிற் சாலையில் குறைவாகக் கொடுக்கின்றனர்' என்னும் குறையும் ஏற்படாதன்றோ? இவைகள் எல்லாம் நல்ல திட்டங்கள் அல்லவோ?

சர்க்கா :—நீ சொல்லுகிறபடி நடந்தால் நீயும் இந்தியாவில் இடம் பெறுவதால் குற்றம் ஒன்றும் வராது என்றுதான் எனக்கும் படுகிறது. இத்திட்டங்களைப் பற்றி முதலாளிகளும் அரசாங்கமும் கலந்து சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வந்தால், தொழிலாளர் உலகத்திற்கு நலமாகத்தான் இருக்கும். சரி, உன் வேலையை நீ ஒழுங்காகச் செய்துவா. நானும் என் கடமைகளைச் செய்து வருகிறேன். மற்றொரு சமயம் ஓய்வு கிடைத்தபோது உன்னை வந்து சந்திக்கிறேன். வணக்கம்.

அருஞ் சொற்கள் :

ஒரு படித்தாக - ஒரேவிதமாக, ஊதியம் - சம்பளம், அல்லல் - துன்பம், அரிதாய் - கடினமாய், திங்கள் - மாதம். பணிபுரிவோர் - வேலைசெய்வோர், மார்க்கம் - வழி.

கேள்விகள் :

1. எந்திரங்கள் இருப்பதால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய துன்பங்கள் யாவை?
2. எந்திரம் சர்க்காவினிடத்தில் தொழிலாளர் குறையைப் போக்க எந்தெந்த முறைகளைக் கையாளக் கூறியது?

பயிற்சி :

1. எந்திரமும் கைத்தொழிலும் என்னும் தலைப்புக் கொடுத்து ஒரு கட்டுரை எழுது.

இலக்கணம் :

## ஆகு பெயரும் வினையாலணையும் பெயரும்

'நாடே சிரிக்கிறது' என்றால் என்ன பொருள்? நாட்டில் உள்ள மக்கள் சிரிக்கின்றனர் என்பதுதானே உண்மைப் பொருள். ஆகவே, நாடு என்னும் இயற் பெயர் அதனோடு இயைபுடைய மக்களுக்கு ஆகிவந்ததால், இதனை ஆகுபெயர் என்று இலக்கணம் கூறும்.

'வந்தான்' என்பதற்கும் வந்தானை என்பதற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? வந்தான் என்பது வினைமுற்று. வந்தானை என்னும் வினைமுற்று வேற்றுமை உருபை ஏற்று, வந்த மனிதனையோ சிறுவனையோ குறிக்கிறதல்லவா? இவ்வாறு, வினைமுற்றுப் பெயர்த்தன்மையடைந்து, வேற்றுமையுருபை ஏற்று வந்தால், அதனை வினையாலணையும் பெயர் என்பர்.

பயிற்சி ;

1, உலகம் போற்றும், பணிபுரிவோர், அமர்ந்தவர்களுக்கு, நீலம் சூடினாள், வெள்ளையை வண்டியில் கட்டு, வருவல் உண்டாயா? தலைக்கு ஓர் அணை கொடு, கெடுவான் கேடு நினைப்பான் ஈயார்தே தட்டை—இவற்றுள் வினையாலணையும் பெயர், ஆகுபெயர் இன்ன எனக் காரணத்துடன் கூறு.

2. வினையாலணையும் பெயர்க்கும் ஆகு பெயர்க்கும் தனித்தனி மும்மூன்று உதாரணம் எழுது.

## 6. சித்திரம்

1. கலைகள் அறுபத்து நான்கு என்று கணக்கிட்டுள்ளனர் நம் முன்னோர். அவற்றுள் ஒன்று சித்திரம் என்பது. இதனோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் கலை, ஓவியம் எனப்படும். ஓவியம் கல்லாலும் சுதையாலும் அமைக்கப்படும் உருவம். சித்திரம் என்பது பல் வேறு நிறங்களால் சுவரிலும் காகிதங்களிலும் தீட்டப்படுவது. சித்திரத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதாவது சிற்பமாகிய ஓவியத்தில், உருவத்தை வடிப்பதன் முன்பு, அவ்வுருவத்தின் அமைப்பை முதலில் தம் மனக்கண்ணில் கொள்வதற்குச் சித்திரமே துணைசெய்ய வல்லது. ஆகவே, ஓவியத்திற்கு அடிப்படையானது சித்திரம் என்று கூறினும் மிகையாகாது.

2 சித்திரக்கலை பலவிதத்திலும் சிறப்புடையது என்னலாம். அழகிய தோற்றத்தால் இன்பத்தை ஊட்டவல்லது. இயற்கைக் காட்சிகளை எடுத்துக் காட்டுவது. நேரில் பார்க்கக்கூடிய பொருளையும் சித்திரத்தில் பார்க்கும் போது அப்பொருளின்பால் அமைந்த இயற்கை அழகிலும் மிஞ்சிய அழகுடையதாய்க் காணப்படும். சித்திரக்கலை பல சக்திகளை வளர்க்கும் பேர் ஆற்றல் பெற்றதாகும். இதனால், ஞாபகசக்தி, கற்பனைசக்தி, அனுமானசக்தி முதலிய சக்திகள் வளர்கின்றன. 'சித்திரமும் கைப்பழக்கம்' என்னும் முதுமொழிக்கிணங்க, இதனைத் தீட்டும் பயிற்சியில் இறங்கினால், இதன் மூலம் கையிலுள்ள நரம்புகளுக்கு வலிமை ஏற்படுகிறது. ஒழுங்கு முறை, தெளிவு அழகு முதலிய தோன்ற, எழுத வேண்டும் என்னும் ஊக்கம் எழுகின்றது. பொருள்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும் என்


னும் எண்ணமும் உண்டாகிறது. சித்திரக்காரன் எழுதும் சித்திரம் மக்கள் வடிவமே அன்றி, மாவும் புள்ளும் மற்றும்பல உயிருள்ள பொருள்களின் உருவங்களும் ஆதலின், அப்பொருள்களின் மீது, இரக்க உணர்வும் தோன்ற இக்கலை துணை செய்கிறது. பலபொருள்கள் இப்பொழுது நாம் காணுதற்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவை சித்திரங்களில் தீட்டப்பட்டிருந்தால், அவற்றின் மூலத்தை உணர்ந்து இன்புறலாம். பண்டைய நாகரிகம் பலவற்றை அறிதற்கு இதுவும் ஒரு துணைக்கருவியாகும். சித்திரக்கலை தன்னைப் பயின்றவரை சும்மா இருக்கவிடாது. பல புதிய பொருள்களைத் தேடிக்கண்டு, அவற்றையும் சித்திரத்தில் அமைக்கத் தூண்டிக் கொண்டே இருக்கும். சொல்லால் புரியவைக்க இயலாதவற்றை மனத்தில் எளிதில் சித்திரத்தின் மூலம் புரியச் செய்து, பதியவைக்கலாம். இதனால்தான் இளைஞர்களாகிய உங்கட்குச் சித்திரப்படங்கள் பாடத்தில் மிகுதியாகக் காட்டப்பட்டுள்ளன. வாணிபம் பெருகுதற்கும் இச்சித்திரமே பயன்படுகிறது. இன்னமும் இதன் பெருமையும் அருமையும் பலவாக அமைந்து இருக்கின்றன.

3. இன்னோரன்ன பெருஞ்சிறப்பு வாய்ந்த கலையாக இது இருப்பதனால்தான், இதனை எந்நாட்டவரும் விரும்பிக் கற்றுப் பயனடைந்து வருகின்றனர். இக்கலை மேனாடுகளில் சிறப்பாகவே போற்றப்பட்டு வருகிறது என்றுகூடக் கூறலாம். இவர்கள் தீட்டும் சித்திரங்களுக்கும் நம்மவர் வரையும் சித்திரங்களுக்கும் பெரிதும் வேறுபாடுண்டு. மேற்கு நாட்டவர் அச்சித்திரத்தில் உண்மை வடிவை அப்படியே எழுத முற்படுவர். அதனால் பார்ப்பவர்க்கு இன்பம் தராது போயினும் அது

குறித்துக் கவலைப்படமாட்டார்கள். அவர்கட்கு வேண்டியது உண்மை வடிவம் அதில் தீட்டப்பட்டிருக்கிறதா என்பது மட்டும் தான். ஆனால், நம் சித்திரக்காரர்களோவெனின், உண்மை வடிவம் சித்திரத்தில் தீட்டப்படுதலோடு, தம் கைத்திறத்தால் பார்ப்பவர் உள்ளம் கவரும் வகையில் சிறிது செயற்கையையும் இணைத்துத் தீட்டுவர். அப்பொழுது அவர்கள் தம் யுக்தி, வன்மை யாவும் அதில் காணப்படும். இக்காரணங்கள் கொண்டே இச் சித்திரக்கலை, அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாக இருந்து வருகிறது.

4. இத்துணைச் சிறப்பு இச்சித்திரத்திற்கு இருப்பதால் தான், ஆலயங்களிலும் பெரிய பெரிய மாடங்களிலும் இச்சித்திரங்களைத் தீட்டிவைக்கின்றனர். கோவில் சித்திரங்களின் அழகைக்காண விரும்புவோர், மதுரை, தஞ்சாவூர், சிக்கல், திருவிடைமருதூர் போன்ற இடங்களுக்குச் சென்று காண்பீர்களாக. சென்னையில் வாழ்பவர் கந்த கோட்டத்திற்குச் சென்றாலும், சுவர் முழுமையும் சித்திரங்கள் அமைந்து சிறப்பினைத் தருவதை நன்கு உணரலாம். வீடுகளில் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தது என்பதை பழைய நூல்களில் பேசப்பட்டிருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

5. மதுரையில் ஒரு மாளிகையின் சுவரில் புலி காட்டில் உலவுவதைப் போலத் தீட்டப்பட்டிருந்ததாம். அம்மாளிகை வழியே ஒரு யானை தன் மீது ஒரு மாதினை ஏற்றிக் கொண்டு சென்றதாம். சென்ற அக்களிறு சித்திரத்தில் தீட்டப்பட்ட கொடுவரியின் தோற்றத்தைக் கண்டு, அது உயிருள்ள புலியென்றே எண்ணிப் பிளிறத்தொடங்கியதாம். இதனை அறிந்த ஆடவன்



ஒருவன் அக் கைம்மாவினை, புலிச் சித்திரத்தின் தோற்றத்திலிருந்து ஓட்டிச்சென்றானும். இதனால், சித்திரம் உயிருள்ள பொருளாகவே தீட்டப்படும் என்பது தெரிகிறதல்லவா? இவ்வாறு பரிபாடல் என்னும் சங்க நூல் கூறுகிறது. சித்திரங்கள் அழகுடன் கம்பீரமும் நிறைந்து எல்லோருடைய மனங்களையும் ஈர்த்துத் தம்பால் ஒன்றச் செய்யும் இயல்புடையன என்பது புலனாகிறதன்றோ! இத்தகைய சித்திரக்கலையினை இளஞ் சிறார்களே! நீங்கள் பயில முந்துங்கள். இது எளிதில் பயிலக்கூடிய கலையே. இதற்குக் கைப்பழக்கந்தான் மிகுதியும் தேவை. சித்திரமும் கைப்பழக்கம் என்பது நம் நாட்டு அனுபவ மொழியன்றோ!

அருஞ் சொற்கள் :

சுதை - சுண்ணாம்பு, தீட்டப்படுவது - எழுதப்படுவது, வடிப்பது - அமைப்பது, மிஞ்சிய - மிகுந்த, ஆற்றல்- வல்லமை, அனுமானம் - யூகித்து அறிதல், ஊக்கம் - முயற்சி, புள் - பறவை, மா - விலங்கு, களிறு - யானை, கொடுவரி - புலி, ஈர்த்து - கவர்ந்து, சிறார் - சிறுவர்.

கேள்விகள் :

1. சித்திரத்திற்கும் ஓவியத்திற்குமுள்ள வேறுபாடு யாது?
2. சித்திரக்கலையால் ஏற்படும் நன்மைகள் யாவை?
3. நம் நாட்டுச் சித்திரக்கலைக்கும் மேல்நாட்டுச் சித்திரக்கலைக்கும் உள்ள வித்தியாசம் யாது?
4. சித்திரக்கலையைக் கற்பதனால் எந்தெந்தச் சக்திகள் உண்டாகின்றன?

பயிற்சி :

1. சித்திரங்கள் அமைந்த திருக்கோவில்கள் சில வற்றைக் கூறு?
2. பழங்காலத்தில் பெரிய பெரிய வீடுகளிலும் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன என்பதற்கு ஓர் உதாரணம் கூறு?

இலக்கணம் :

## வேற்றுமையும் அதன்பொருளும்

'கந்தன் வந்தான்' இதில் கந்தன் முதல் வேற்றுமையல்லவா? அம்முதல் வேற்றுமை இவ்வாக்கியத்தில் எழுவாயாகத்தானே நிற்கிறது. ஆகவே, முதல்வேற்றுமை எழுவாய்ப் பொருளைத்தரும் என அறிக. இதற்குக் கருத்தாப்பொருள் வேற்றுமை என ஒரு பெயருண்டு.

அரசன் கோவிலைக் கட்டினான். கோவிலை என்னும் சொல்லில் இரண்டாம் வேற்றுமை உருபான, ஐ இருக்கிறது. இது இங்கு ஆக்கல் பொருளில் உள்ளது. ஆகவே, இரண்டாம் வேற்றுமைக்கு ஆக்கல் முதலிய பொருள்கள் உண்டென அறிக.

வாளால் வெட்டினான் என்னும் முற்றுத்தொடரில் மூன்றும் வேற்றுமையான ஆல் வந்துளது. இது வெட்டுதற்குக் கருவியாகிய வாளோடு வந்திருத்தலின், கருவிப் பொருள் காட்ட வல்லதாம். இதுபோலவே அவனுடன் நான் சொன்னேன் என்று கூறும்போது உடன் என்னும் உருபு உடன் நிகழ்ச்சிப் பொருளில் நிற்றலைக்காண்க. எனவே, மூன்றும் வேற்றுமைக்குக் கருவிப் பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளும் பொருள்களாம்.

'ஏழைக்குச் சோறு போட்டான்' நான்காம் வேற்றுமை உருபு 'கு' இருப்பது உங்களுக்குத் தெரிகிறதல்லவா? இவ்வுருபுக்குக் கொடை, பகை முதலிய பொருள்கள் உண்டு.

பயிற்சி :

1. இப்பாடத்திலிருந்து முதல்வேற்றுமை இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபுகளை ஏற்ற சொற்களுக்குத் தனித்தனி நான்கு உதாரணங்களை எடுத்துக் காட்டி, அவை எந்தப் பொருளில் வந்துள்ளன என்பதையும் குறிப்பிடு.

## 7. ஜகதீஸ் சந்திரபோஸ்

1. நம் நூல்கள் பிறப்பு வகையை ஏழாகப்பிரித்துக் கூறுகின்றன. அவை தேவர் மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. "எழுபிறப்பும் தீயவை தீண்டா" என வள்ளுவரும் கூறியுள்ளார். ஊர்வன என்பன பாம்பு, பல்லி முதலியன. நீர்வாழ்வன தவளை, மீன், முதலை முதலியன. பிற பிறப்புக்களைப் பற்றிக் கூறவேண்டுவது இல்லை. அவை உங்கட்கு நன்கு தெரிந்தவையே.

2. இப்பிறவிகளின் அறிவு ஒருப்படித்தாக இல்லை. பலவகையாக உள்ளன. தாவரங்கட்கு மெய் உணர்ச்சியாகிய ஊற்றால் அறியும் அறிவும், நத்தை, சிப்பி முதலியவற்றிற்கு மெய்யறிவுடன் நாவறிவாகிய சுவையறிவும், கறையான், எறும்பு முதலியவற்றிற்கு மெய்

அறிவு, நாவறிவு மூக்கால் அறியும் மண அறிவும், தும்பி, நண்டு முதலியவற்றிற்கு மெய்யறிவு, நாவறிவு, மூக்கறிவுடன், கண்ணால் பார்த்தறியும் கண்ணறிவும், தேவர், மக்கள், விலங்கு, பறவை முதலியவற்றிற்கு மெய்யறிவு, நாவறிவு, மூக்கறிவு, கண்ணறிவுடன், செவியறிவாகிய கேட்கும் அறிவும் பொருந்தியுள்ளன வாக நன்கு உணர்ந்து கூறி இருக்கின்றனர். இவற்றுள் தாவரமாகிய மரஞ்செடி கொடிகட்கு மெய்யறிவு உண்டு என்பதை விளக்கிக் காட்டவே இப்பாடம் எழுந்தது

3. நம் முன்னோர் எவற்றையும் கூடமாகக் கூறிச் சென்றுள்ளனர். அவ்வுண்மைகளை விஞ்ஞான முறைப்படி விளக்கிக் காட்டியவர்கள் விஞ்ஞான நிபுணர் கள் ஆவார். அவர்களுள் தாவரங்களும் உறங்குகின் றன என்று காட்டியவர் **சர் சகதீச சந்திரபோஸ்** என்னும் பெரியார் ஆவார். இவர்தாம் உலகில் எங்கும் இது வரை எவரும் கண்டறியாத தாவர சாஸ்திர நுட்பங் களைக் கண்டறிந்தவர். இவர் பிறந்தவிடம் நம் இந்தி யாவில் வங்கமாகாணத்தில் பிக்ரம்பூர் என்பது. இவர் பிறந்தகாலம் 1858-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் நாள். இவர் தந்தையார் **பகவன் சந்திரபோஸ்** என்பவர்.

4. சர் சகதீஸ் சந்திரபோஸ் இளமை முதற் கொண்டே ஊக்கம், நுண்ணறிவு ஆகிய இவற்றைக் கொண்டு விளங்கினார். இக்குறிகள் இவர் பிற்கால வாழ்வில் தலைசிறந்த பேர் அறிஞராக உலகம் போற் றும் நிலைக்கு வருவார் என்பதை விளக்கி நின்றன. இவர் கல்கத்தாவில் **செயின்ட் சேவியர்** கல்லூரியில் பயின்று **பி. ஏ.** பட்டம் பெற்றார். இவருக்கு இளமை

யில் இருந்தே இயற்கைத் தத்துவ உணர்ச்சியில் ஈடு பாடு இருந்து வந்ததால் லண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1885–இல் இயற்கைத் தத்துவ அறிஞர் பெறக்கூடிய பி.எஸ்ஸி. பட்டத்தையும் பெற்றார். இவர்



லண்டன் மாநகரத்தில் பட்டம் பெற்றுத் திரும்பியதும் கல்கத்தாவிலேயே மாகாணக் கல்லூரியில் பூத பௌதிக சாஸ்திரப் பேராசிரியராக நியமிக்கப் பட்டார்.

5. அத்தொழில் அவர் செய்யும் ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்தது. பல சாஸ்திர உண்மைகளைக் கண்டறிந்து அவற்றைப் பத்திரிகைளில் வெளியிட்டு வந்தார். இதனால், இவருடைய பேரும் புகழும்

பெரிதும் பரவலாயின. இவருடைய பரந்த இயற்கைத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சியைக் கண்டு வியந்த லண்டன் சர்வ கலாசாலை, டாக்டர் ஆப் சைன்ஸ் என்னும் பட்டமாகிய டி. எஸ்ஸி. என்னும் பட்டத்தையும் தந்து கௌரவித்தது. இவரை இவ்வாறு ஊக்கப்படுத்தவே, இவர் தம் ஆராய்ச்சிக்கு வேண்டிய கருவிகளைத் தாமே செய்யவும் தலைப்பட்டார். இவரை ஒரு சமயம் வெள்ளையர் நோக்கி "இக் கருவிகள் எங்குச் செய்யப் பட்டன? இவ்வளவு நுட்பமாகவும் உள்ளனவே!" என்று கேட்டபோது, "இவை என் தாய் நாட்டில் செய்யப்பட்டன" என்று விடை இறுத்தாராம். இதனால், இவருக்கு இருந்த நாட்டுப்பற்று வெளியாகிறதல்லவா? மின்சார அலைகளைப்பற்றி ஆராய்ந்தவர் மூவர். ஒருவர் இங்கிலீஷ்காரர், இன்னொருவர் அமெரிக்கர், மூன்றாவது அறிஞர் நம் இந்தியரான போஸ் பெரியார். இம்மூவரும் செய்த மின்சார அலைகளின் ஆராய்ச்சியில் வெற்றி பெற்றவர், நம் போஸ் பேரறிஞர் என்க. இது நமக்கு ஒரு பெருமை அல்லவா?

6. போஸ் கண்ட ஆராய்ச்சிகள் தாவரங்கட்கும் விலங்குகட்கும் நரம்புத் தொடர்பு ஒன்று என்பது: மரத்து வாழ்க்கையும் மனித வாழ்க்கை போல ஒத்துக் காணப்படுகின்றது என்பது; மரங்களும் உறங்குகின்றன; விழித்துக் கொள்கின்றன என்பது முதலியன. இவர் கண்ட முறைப்படி மரங்கள் இரவு பன்னிரண்டு மணிக்குத் தூங்கத் தொடங்குகின்றனவாம். மீண்டும் காலை எட்டு மணிக்கு எழுந்து கொள்கின்றனவாம்.

7. மரங்கள் உறங்குகின்றன என்று உங்களுக்குத் தெரியவேண்டுமானால், தூங்குமூஞ்சி மரம் என்று ஒரு

மரம் இருப்பதில் இருந்து தெரிந்து கொள்ளுங்கள். அது இரவு நேரத்தில் தன் இலைகளை யெல்லாம் மடக்கிக் கொண்டு காணப்படும்; பகல் நேரத்தில் நன்கு விரித்துக் கொண்டு இலங்கும். மேலும், தாவரங்களுக்கு உணர்ச்சி உண்டு என்பதைத் தொட்டால் சிணுங்கி என்னும் செடியிலிருந்து அறிந்து கொள்ளலாம். அதனைத் தொட்டவுடன் அச்செடி சுருங்கிக் கொள்ளும். சிறிது நேரத்திற்கெல்லாம் அச்சுருக்கத்தைப் போக்கிக்கொண்டு செழித்துக் காணப்படும். இவைபோன்ற பல தாவர நுட்பங்களை மின்சாரத்தின் உதவிகொண்டு விளக்கிக் காட்டியவர் ஜகதீச சந்திரபோஸ் ஆவார். அவற்றின் முறைகளை எல்லாம் நீங்கள் கல்லூரியில் தாவரங்களைப் பற்றிச் சிறப்பறிவு பெறும்போது அறிந்து கொள்வீர்கள். தாவரங்களும் உறங்குகின்றன என்பதை மட்டும் மனத்தில் இப்பொழுது வைத்துக் கொள்ளுங்கள்.

## அரும் சொற்கள் :

ஒரு படித்தாக - ஒரே விதமாக. மெய் - உடல், ஊற்றால் அறியும் அறிவு - சரீரத்தில் பிறர் கைப் பட்டபோதும் பிறர் தொட்டபோதும் உணரும் அறிவு. இப்பி - சங்கு. நிபுணர்கள் - அறிவில் சிறந்த பெரியோர்கள். தத்துவம் - உண்மை. விடை இறுத்தார் - பதில் அளித்தார். இலங்கும் - விளங்கும்.

## கேள்விகள் :

1. எழுவகைப் பிறவிகள் எவை ?
2. ஐவகை அறிவு எவை ?

3. சுபாஷ் சந்திரபோஸ் எங்கு எப்போது பிறந்தார்?

4. இவருக்கு எவ்வெப்பட்டங்கள் எங்குக் கிடைத்தன?

5. இவர் வாழ்க்கை வரலாற்றில் நமக்குப் பெருமை தரும் இரு செயல்கள் எவை?

6. இவர் கண்ட ஆராய்ச்சிகள் எவை?

7. தாவரங்களைப் பற்றி இவர் கண்ட உண்மைகள் எவை?

பயிற்சி :

1. ஒன்று முதல் ஐந்துவரையில் அறிவுபெற்ற உயிர்ப் பொருள்களைக் குறிப்பிடு.

2. 'இவை என் தாய் நாட்டில் செய்யப்பட்டன' இடங்குறி.

3. தமிழ்மொழியறிவில் டாக்டர் பட்டம் பெற்றவர் பெயரைக் குறிப்பிடு.

4. தாவரங்கட்கு உறக்கம் உண்டு, உணர்ச்சி உண்டு என்பதற்கு உதாரணம் கொடு.

5. போஸ் அவர்களைப் போன்று விஞ்ஞான ஆராய்ச்சி செய்த இந்திய அறிஞர் இருவர் பெயர்களைக் குறிப்பிடு.

இலக்கணம் :

## வேற்றுமை உருபும், பொருளும், (தொடர்ச்சி)

மலையிலிருந்து இறங்கினான். இதில் இல் உருபு ஐந்தாம் வேற்றுமையாகும். இவ்வுருபு நீங்கல் பொருளில்

உள்ளது. இதற்கு எல்லைப் பொருளும் உண்டு. சென்னையின் தெற்குச் சிதம்பரம் என்னும் உதாரணத்தைப் பார்.

எனது புத்தகம் என்னும் தொடரில் அது ஆறும் வேற்றுமை உருபு. இதற்குரிய பொருள் உரிமைப் பொருள். வீட்டில் இருந்தான். இல் ஏழாம் வேற்றுமை உருபு. இது இடப் பொருளில் வரும். கந்தா வா! இது எட்டாம் வேற்றுமை. இது விளிக்கும் பொருளில் வரும்.

பயிற்சி :

1. இப்பாடப் பகுதியிலிருந்து 5, 6, 7, 8, ஆம் வேற்றுமை உருபுகளை ஏற்றப் பெயர்கள் தனித் தனி மும்மூன்று எடுத்து எழுதி, அவற்றின் பொருளையும் தருக.

## 8. சிலேடை மொழிகள்

*1.* ஒரு மொழியை நன்கு எழுதவேண்டுமாறுலும் திருத்தமுறப் பேச வேண்டுமாயினும் இலக்கணப் பயிற்சி மிக மிக இன்றியமையாததாகும். இவ் விலக்கண அமைப்புத் தமிழ் மொழியில் செம்மையாக அமைந்துள்ளது. இம்மொழியில் ஐந்து வகையாக இலக்கணங்களைப் பாகுபாடு செய்து அமைத்திருக்கின்னர். அவ்விலக்கணங்கள், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, என்பன. இவ்வைந்தினுள் காணப்படும் அணியிலக்கணத்தின் சிறு பிரிவே சிலேடை என்பது. சிலேடை என்பது ஒரு சொல்லோ தொடரோ ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைச் சமயத்திற்கேற்ப அறிவிப்பதாகும். அதிவீரராமபாண்டியர், அரசுபுரிந்து வந்த

காலத்தில் கவிகை தாங்கினர். எல்லாம் கவிகை தாங்கினர், என்று சிறப்பித்துக்கூறிய தொடரில் இந்தச் சிலேடையணி பொருந்தி இருப்பதைப் பாருங்கள். முதலில் காணும் கவிகைதாங்கினர் என்னும் தொடர், குடையைத்தாங்கினர் என்னும் பொருளிலும், அதே தொடர் அடுத்தபடி கவியை (பாட்டுக்களை) கையில் தாங்கினர் என்னும் பொருளிலும் அமைந்து, அரசாங்கத்தில் குடைபிடிக்கும் பணியை மேற்கொண்டவர்கள் சிறந்த கவிஞர்கள் ஆயினர் என்பதை எவ்வளவு அழகாக அறிவுறுத்தியிருக்கின்றனர் கவனியுங்கள். இத்தகைய சொற்களையும் தொடர்களையும் படிக்குந்தோறும் கழிபேர் இன்பம் தருவதாகக் காணப்படும். இன்னோர் அன்ன சிலேடைச் சொற்களும், தொடர்களும் தமிழ் மொழியில் பல வாகும். அவற்றுள் ஒன்றை இங்கு எடுத்துக் காட்டுவோமாக. அது சர். முத்துசாமி ஐயர் அவர்களும், பூண்டி. ரங்கநாத முதலியார் அவர்களும் பேசிக்கொண்ட நகைச்சுவை ததும்பும் சொல்லேயாகும்.

2. அருமை மாணவர்களே! தம் முயற்சியால் முன்னுக்கு வந்த மிக மிகப் பெரியவர்களுக்குள் சர். முத்துசாமி ஐயர் அவர்களும் ஒருவர். அவர் மிக ஏழ்மையான அந்தணக்குடியில் பிறந்தவர். அவர் தம் தந்தையாரை இளமையிலேயே இழந்தமையால், அவர் தாயார் வீடுகளில் வேலைசெய்து வயிறு வளர்க்க வேண்டியவராய் இருந்தார். முத்துசாமி ஐயர் இளமை முதற்கொண்டே கல்வியில் பெருவிருப்புடையவர். அதனால், தம் ஓய்ந்த நேரங்களை வீணாக்காமல் விடாது படித்துக்கொண்டே வந்தார். மாலையில் தெருவில் உள்ள விளக்குக் கம்பத்தின் அடியில் படித்து வந்தாரென்றால் அவருக்கு இருந்த படிப்பின் அவாவை என்னென்று கூறுவது! இப்படி

அவர் படித்து வந்ததால்தான் உயர்ந்த பதவியைப் பெற்ருர். இவர் சிறந்த நீதிபதியாகத் திகழ்ந்தார். அவருடைய விடாமுயற்சி இளைஞர்கட்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் என்பதற்காக அன்ருே அவருடைய உருவச் சிலை, சென்னை உயர்நீதிமன்றத்தில் நடுநாயகமாக நின்று இன்னும் காட்சியளித்து வருகின்றது. நல்ல உயர்ந்த சலவைக் கற்களாலாகிய வடிவம் அன்ருே அங்குச் சமைத்து வைக்கப்பட்டுள்ளது! அங்கு அவர் வைக்கப் பட்டிருப்பதைக் காணும்போது, உயர் நீதிமன்றத்தில் எப்படி நீதிகள் வழங்கப்படுகின்றன என்பதை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றனரோ என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது.

3. இத்தகைய பெருமை வாய்ந்த சர் முத்துசாமி ஐயர் அவர்கட்கும், பூண்டி ரங்கநாத முதலியார் என்னும் பெரியாருக்கும் நெருங்கிய நட்புண்டு. பூண்டி ரங்கநாத முதலியார் ஆங்கில மொழியிலும், அருங்கணிதத்திலும் தலை சிறந்த புலமை வாய்ந்தவர்கள். இவற்ருேடு தண்டமிழிலும் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். இவர் தமிழ் அறிவை இவர் பாடியுள்ள கச்சிக்கலம்பகம் என்னும் அரிய நூலிலிருந்து நன்கு நாம் அறிந்து கொள்ளலாம். இவர்கள் சென்னை அரசியற் கல்லூரியில் பேராசிரியர் தொழிலைச் சிறப்புடன் நடத்தியவர். மாணவர்களிடத்தில் பேரன்பு கொண்டவர். இவர்க்கு இன்ஞர் இனியார் என்னும் வேற்றுமை கிடையாது. கல்வியில் விருப்பங்கொண்டு நுண்ணறிவுடன் பயிலும் மாணவன் ஏழ்மையுடையவனுனல், அவனுக்குத் தம் சொந்த வருவாயில் பணம் உதவி, படிக்க வைக்கும் இயல்பு வாய்ந்தவர். இவர் ஒரு நாள் தம் வகுப்பில் தினமும் பயின்று வரும் மாணவன் ஒருவன், தொடர்ந்து சில

னாட்கள் வராமையை உணர்ந்தார். அவன் முகவரியை அறிந்து கொண்டு, அவன் வாழும் இல்லத்தை நாடிச் சென்றார். அவன் வராமைக்குரிய காரணங்களைக் கேட்டனர். அவன் "தன் தந்தையார் திடுமென இறந்து போனமையால், கல்லூரிப் படிப்பிற்குப் பணம் கட்ட இயலா



மையால், வருதற்கு இயலவில்லை" என்று கூறினன். அதைக்கேட்டு மனம் இளகி அவன் பி. ஏ. பட்டம் படித்து முடிக்கின்ற வரையில், தம் பணத்தை உதவி செய்து வந்தாரெனில், அவருடைய உதார குணத்தை, என்னென்று உரைப்பது!

4. இத்தகைய ஈகைக்குணம் வாய்ந்த முதலியாரும், நடுநிலைமைதாங்கிய ஐயர் அவர்களும் பொழுது போக்குக்காகப் பல கழகங்களில் உறுப்பினர்களாக இருந்தனர். அவற்றுள் ஒன்று சென்னை மவுண்ரோட்டில் உள்ள காஸ்மா பாலிடன் கிளப் என்பது. இங்கு ஒரு நாள் நிகழ்ந்த சம்பவந்தான் நகைச்சுவைக்குரிய நிகழ்ச்சியாகும்.

5. பூண்டி ரங்கநாத முதலியார் தம்மை ஒத்த நண்பர்களுடன் குதுகலமாக உரையாடிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் சர். டி. முத்துசாமி ஐயர் அவர்களும் அங்கு வந்தனர். அவர் வரும்பொழுது தம் கண்



ணுக்கு எதிரே காட்சியளித்தவர் திரு முதலியார் அவர்களேயாவர். உடனே, ஐயரவர்கள் தம் இரு கைகளைக் கூப்பி "முதலியாரே அடியேன்" என்றனர். அப்படிச் சொன்னபோது ஐயரின் இடக்கையில்,வளை தடி தொங்கிக்

கொண்டிருந்தது. உடனே, முதலியார் ஐயரைப் பார்த்து, அப்படியானால் உம்கையில் "தடியேன்?" என்று கேட்டனர். அங்கிருந்தவர்கள் யாவரும் கொல்லென நகைத்தனர். சர். டி. முத்துசாமி ஐயருக்கும் நகை தாங்கமுடியவில்லை. சிறிது நேரம் கிளப்பு முழுமையும் ஓரே சிரிப்பு மயமாய்விட்டது.

6. ஒரு சிலர் காரணம் தெரியாமலே சிரிக்கத் தொடங்கினர். எல்லாரும் நகைக்கையில் "நாமும் நகைக்காமல் இருத்தல் ஒழுங்காயிராது" என்பதற்காக அவர்கள் நகைத்தனர் என்றாலும், காரணத்தைமட்டும் அறிந்து கொள்ள வேண்டுமென்பது அவர்கட்கு எண்ணம். மெல்ல பக்கத்தில் இருந்தவர்களை உசாவினார்கள். அங்கிருந்தவர், தம்மைக்கேட்ட நண்பரைப்பார்த்து, "ஒன்றுமில்லை. நம் நீதிபதி ஐயர் தமக்கும், முதலியாருக்கும் இருக்கும் நெருங்கிய நட்புரிமை காரணமாகப் பணிமொழியில் 'அடியேன்' என்று கூறினர். அதனை முதலியார் பணிமொழியாக ஐயர் கூறினார் என்பதை உணர்ந்திருந்தும், இம்மொழியைக்கொண்டு சிறிது வேடிக்கை பண்ணவேண்டுமென்பதற்காக, நீர் என்னை அடிக்கமாட்டேன் என்று கூறுகிறீர்களே அவ்வாறிருக்க, உம்கையில் ஏன் தடியை வைத்துக்கொண்டிருக்கிறீர் என்று கேட்பார்போல்; 'தடியேன்'? என்றனர். இதுதான் இத்துணைச் சிரிப்புக்கும் காரணம்" என்றனர். இந்த விளக்கத்தைக்கேட்ட நண்பர்கள் மேலும் மேலும் நகைக்கத் தொடங்கினர்.

7. நல்லறிஞர்கள்பேச்சில் இன்னோரன்ன பொருள் பொதிந்த நகைச்சுவைத் தொடர்கள் பலவாகும். அவற்றைப் போகப்போக உணர்ந்துகொள்வீர்கள். புலவர்

கள் பாடிய சிலேடைக் கவிகள் பல. அவற்றிலும் இத்தகைய சுவை எண்ணிறந்ததாகும்.

## அருஞ் சொற்கள் :

யாப்பு-பாட்டை எவ்வாறு எழுதவேண்டும் என்பதை அறிவிக்கும் இலக்கணம். பணி - வேலை, கழிபேர் இன்பம் - மிகப்பெரிய இன்பம், நீதி மன்றம் - நியாயத் தீர்ப்பளிக்கும் சபை (ஹைகோர்ட்), புலமை - அறிவு, ஏழ்மை - வறுமை, முகவரி - விலாசம், இல்லம் - வீடு, உதாரகுணம் - தாராளமாகக் கொடுக்கும் குணம், குதுகலம் - இன்பம், உசாவினர் - கேட்டார், பணிமொழி - வணக்கமான வார்த்தை, எண்ணிறந்தன - பல.

## கேள்விகள் :

1. ஐந்து இலக்கணங்கள் எவை?
2. சர். முத்துசாமி ஐயர் எங்ஙனம் முன்னுக்கு வந்தனர்?
3. பூண்டி ரங்கநாத முதலியார் தாராளமான மனமுடையவர் என்பது எங்ஙனம் தெரிகிறது?
4. ஐயரும், முதலியாரும், எவ்வாறு பேசிச் சிரிப்பை உண்டாக்கினர்?

## பயிற்சி :

1. கவிகை தாங்கினர், கவிகை தாங்கினர். பொருள் கூறு :—
2. கச்சிக் கலம்பகம், சிலேடை, யாப்பு இவற்றைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

### இலக்கணம்:

### உடன்பாடும் எதிர் மறையும்

'வந்தான்' என்னும் வினைக்கும், வந்திலன் என்னும் வினைக்கும் வேறுபாடு யாது? வந்தான் என்பது செயல் நடந்தமையையும், வந்திலன் என்பது செயல் நடவாமையையும் அறிவிக்கிறது. ஆகவே, நடக்கும் தொழிலை அறிவிப்பது உடன்பாடு; நடவாமையை அறிவிப்பது எதிர் மறையாம்.

பயிற்சி:

1. எழுதவேண்டும், அமைந்துள்ளது, அறிவிப்பது, தாங்கினர், பாருங்கள், மேற்கொண்டவர், கவனியுங்கள், தருவது, காணப்படும், பேசிக்கொண்ட, பாட்டுச்சொல், கிடையாது, வாராமை, இயலாமையால், தாங்கமுடியவில்லை, நகைக்காமல், இல்லை, அடிக்கமாட்டேன்—இவற்றுள், முதலில் உடன்பாட்டையும், எதிர்மறையையும், அறிவிக்கும் சொற்களை எடுத்து எழுதி, பிறகு எதிர்மறைச்சொற்கு உடன்பாடும், உடன்பாட்டுச் சொற்கு எதிர்மறையும் கூறு.

## 9. வடதுருவ மண்டலம்

1. விண்ணில் எண்ணில் அடங்காத மீன்கள் ஒளி விட்டுக் கொண்டிருக்கின்றன. அவை பகற்போதில் பரிதியின் பேர் ஒளியில் மறைந்து விளங்குதலின், நம் கண்ணுக்குத் தோன்றாமல் இரவில் மட்டும் காட்சி அளிக்கின்றன. அவ் விரவிலும் விசும்பு மேகப்படலத்தால் மூடப்படாமல் உள்ளபோதுதான் தோற்றம்

அளிக்கும். இங்ஙனம் பகற்போதில் தென்படாமல் இரவுப் பொழுதில் விளக்கந் தந்து மின்னிக் கொண்டிருந்தும் நட்சத்திரங்கள் அனைத்திருக்கும் சிறப்புக் கூறுதற்கில்லை. நூல்களிலும் பெருமையாகப் பேசப்படுவன அல்ல. அப்பல்கோடி தாரகைகட்குள் ஒரு சிலவே அறிஞர்களின் கருத்துக்களைத் தம்பால் ஈர்த்துத் தம்மைப்பற்றி பேசுமாறு தூண்டி நிற்கின்றன. அப்படி அமையும் உடுக்களுள் துருவநட்சத்திரமும் ஒன்று. அத்துருவ நட்சத்திரத்திற்கு நேரேயுள்ள மண்டலம் துருவ மண்டலம் என்பது. அதுவே உலகின் வட முனை. அதனை நார்த்போல் என ஆங்கிலத்தில் கூறுவர். அதனைக் கண்டு அதன் நிலையை அறிந்த வரலாற்றைக் கண்டு ஈண்டு உணர்வோமாக.

2. வடதுருவம் ஒரு பிரதேசமே யாகும். அப்பிரதேசத்தில் நாம் தினந்தோறும் கண்டு வரும் இரவையும் பகலையும் காணமுடியாது. ஓர் ஆண்டில் ஆறுமாதம் பகலாகவே இருக்கும்; மிகுந்த அறுதிங்கள்கள் இரவாகவே தோன்றும். இப்படி இருந்தால் இப் பிரதேசத்தில் புல்பூண்டுகளோ, புல், விலங்குகளோ, மக்கள் தொகுதியானரோ நிலையாகவாழமுடியுமா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அப்பிரதேசத்தில் எங்கும் பனிக் கட்டிகள் உறைந்தே காணப்படும்.

3. இத்தகைய துருவப் பிரதேசத்தை நேரில் கண்டு, அங்குள்ள இயல்பை அறிய ஐரோப்பியர்களும் அமெரிக்கர்களும் முயன்று வந்தார்கள். இம் முயற்சி எளிய முயற்சி அன்று; அரிய முயற்சி. இதனால் பொருட் செலவும், உயிர் இழவும் பல நேரிட்டன. என்றாலும்

இவ்விருநாட்டு அஞ்சா நெஞ்சம் படைத்தவீரப் பெரு மக்கள், தம் முயற்சியைக் கைவிட்டிலர். இம் முயற் சியில் வெற்றி பெற்றவர் பியரி என்னும் பெயரிய அமெ ரிக்கர் ஆவர்.

4. பியரி வீரர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின், நாவாய்ப் படையில் வேலைசெய்து வந்தவர். அவர் புது காடுகள், இடங்கள் முதலியவை கண்டுபிடிக்கப்பட்ட வரலாறுகளை அடிக்கடிப் படிப்பது வழக்கம். அவர், அவருக்குமுன் நான்ஸென் என்னும் தீரப்புருஷர் 1893-ஆம் ஆண்டு புறப்பட்டு, மூன்றாண்டுகள் முயன்று கிரீன் லாண்டு பிரதேசம் கண்டுபிடித்த வரலாற்றினைப் படித் தார். அத்தகைய வரலாறு நம் பியரிப் பெரியாரையும் மீண்டும் கிரீன்லாண்டுக்குச் சென்று அப்பிரதேசத்தைக் கண்டு மீளத்தூண்டியது. 1886-ஆம் ஆண்டு தமக்குத் துணையாக, ஒரு குழுவினைத்திரட்டிக்கொண்டு புறப்பட் டார். இவர் புறப்பட்டவேளை நல்லவேளையாக இல்லை. இடைவழியில் நோய் கண்டது. அதற்கு மேல் சென்றால், முயற்சி பயனற்றுப் போகும் என உன்னித் திரும்பிவிட் டார். நோய் நீங்கியது. என்றாலும், உடனே தம் பய ணத்தை மேற்கொண்டிலர். அடுத்த ஆண்டு செல்லலுற் றார். அச் செலவு வெற்றிகரமாக முடிந்தது. கிரீன்லாண் டைக் கண்டார். தாம் கண்டவற்றை உலகமக்களுக்கு உணர்த்தினார். அதனால், அவருடைய பேரும் புகழும் பரவலாயின.

5. இந்த வெற்றியால் பியரிதீரர் மனம் அமைதி யுற்றிலர். எப்படியாவது வடதுருவ மண்டலத்தைக் காண வேண்டுமென்று எண்ணிக் கொண்டே இருந்தனர். இவர் எண்ணத்தை அறிந்த அமெரிக்கர் இவருக்கு


ஊக்கம் அளித்து, இவர் வடதுருவம் காணுதற்கான வசதிகளையும் தந்தனர். சுடர்விளக்கானாலும் தூண்டு கோல் வேண்டுமல்லவா? இவ்வாறு அமெரிக்கர் தமக்கு ஊக்கமும் ஆக்கமும் உதவவே, பியரி 1908-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நியூயார்க்குத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார். இவர் ஏறிச்சென்ற கலம் ரூஸ்வெல்டு என்னும் பெயருடையது. அப்போது இவரை வழிகூட்டி அனுப்பியவர்கள் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களும், ஐக்கிய நாட்டுத்தலைவரான ரூஸ்வெல்டும் ஆவார்.

6. ரூஸ்வெல்டு கப்பல் புறப்பட்ட சிலதினங்களில் யார்க்கு முனையை அடைந்தார். இங்கு வாழ்பவர் எஸ்கிமோ இனத்தவர். அவர்களுள் சில குடும்பத்தினரை யும் இருநூற்றைம்பது நாய்களையும் தம் கப்பலில் ஏற் றிக்கொண்டு வடக்கு நோக்கி மேலும் பயணப்பட லானார். இவர் செல்லாறு தோறும் ஒரே பனிக்காடு, பனி கப்பலைச் சூழ்ந்துகொண்டது. அதற்குமேல் செல்ல வேண்டாவென்று எண்ணி ஒரு நிலப்பகுதியில் இறங்கி னார். அவ்விடத்தைச் சீர்ப்படுத்தினார். கப்பலில் இருந்த சாமான்களை இறக்கினார். ஒரு சிறு கிராமம் உண்டாக்கி னார். தம்முடன் அழைத்து வந்த எஸ்கிமோ குடும்பத்தி னரை அங்குக் குடியேற்றினார். இவ்விடத்தில் ஆறுமாத காலம் தங்கினார். இங்கிருந்து மேலும் நானூற்றைம்பது மைல் சென்றால் வடதுருவ மண்டலத்தை எட்டலாம்.

7. இவ்வளவுதூரம் பல இன்னல்களைத் துய்த்துக் கொண்டு பனியைப் பாராமலும், மழையைக்கண்டு மனம் மாறாமலும் வருகின்ற பியரிப் பெரியார், இந்த நானூற் றைம்பது கல் தொலைவையும் கடந்துபோகாமல் இருப்

பாரா? ஆகவே, 1909-ஆம் ஆண்டு பிப்பிரவரித்திங்கள், 15-ஆம் நாள், இவரும் இவர் குழுவினருள் எழுவருட னும், எஸ்கிமோக்களில் 95 பேர்களுடனும், 150 நாய் களுடனும், 28 சகடங்களையும் கொண்டு தம்பயணத்தைத் தொடங்கினர். இவர்கள் தம் கைவசத்தில் ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் போதுமான உணவுப்பொருள் களைக்கொண்டிருந்தனர். அன்னமயம் பிராணமயம் அல் லவா? அன்னம் ஒடுங்கிஞல் அனைத்தும் ஒடுங்கிவிடுமே. ஆகவே, உணவையும் உடன்கொண்டு சென்றனர்.

8. இவர்கள் கடந்து செல்லவேண்டிய பிரதேசம் பனி உறைந்த பிரதேசம். அப்பனியிலேயே போய்க் கொண்டிருந்தனர். சென்றவர்களுள் சிலர் கை கால் ஒடிந்தனர்; சிலர் நோய்வாய்ப்பட்டனர். அவர்களை மேலும் அழைத்துப் போதல் அடாதென எண்ணிய பியரி, அவர் களைத் திரும்பித் தாம் புறப்பட்ட புதிய இடமாகிய கிரா மத்தை அடைய ஏற்பாடு செய்து விட்டனர். கடைசி யில் இவருடன் நின்றவர் நான்கு எஸ்கிமோக்களும், அவருடைய பணியாளன் ஹென்ஸன் என்பவனும் ஆவர். நாற்பது நாய்கள் உடன் இருந்தன. வண்டிகள் பல கிலமாகிப்போக, நல்ல நிலையில் இருந்தவை ஐந்தே யாகும். பலர் திரும்பிவிட்டதால் உணவு மிகுதியும் செலவாகாமல், ஏறக்குறைய நாற்பது நாட்களுக்கு வரக் கூடிய அளவுக்கு மிகுந்துஇருந்தது. இவ்வாருன கட்டத் துடன் ஒரு மாதகாலம் பயணப்பட்டு, முந்நூற்றுப்பதி னேழு மைல்களைக்கடந்தனர். இன்னமும்கடந்து வடதுரு வமண்டலத்தைக் காணவேண்டிய தொலைவு நூற்று முப்பத்துமூன்று மைல்களாகும். இந்தத் தூரத்தை வெகு சிரமப்பட்டுக்கடக்க வேண்டி இருந்தது. தொடர்ந்து



இவரால் நடந்துபோக இயலவில்லை. சிறிது தூரம் நடப் பதும் பிறகு உறக்கம் கொண்டு சிரமத்தைத் தீர்த்துக் கொண்டுமேலும் பயணப்படுவதுமாக இருந்தது. இவ் வாறு சென்று, 1909-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி வடதுருவத்தை அடைந்து விட்டனர். ஆ! அப்பொழுது அவர் அடைந்த ஆனந்தத்தைச் சொல்ல வும் வேண்டுமோ! ஆடினார்; பாடினார்; தோள்களைத் தட்டினார்; துள்ளினார்; "இருபது ஆண்டுகளாக நான் கண்டுவந்த கனவு நினைவாயிற்று," என்று கூறி மகிழ்ந் தார். தம் மனைவியாரால் செய்யப்பட்ட அமெரிக்காவின் கொடி எழுதப்பட்ட பட்டுத் துண்ணியை எடுத்துக் கொம் பில் கட்டி வடதுருவத்தின் பனி மலைமேல் செருகினார்.

9. பியரிவீர புருடர். வடதுருவப் பிரதேசத்தில் நீண்ட காலம் தங்கியிருக்கவில்லை. எப்படித் தங்கி யிருக்கமுடியும்? அங்கு ஒரே பனிப் படலம். தம் உணவுப் பொருள்கள் யாவும் சுருங்கிப்போயின. "நாம் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றி விட்டோம். இனி நமக்கு இங்கு வேலையில்லை" என்று புறப்பட்டுத் தம் புது கிராமத்தைப் பதினாறு நாட்களில் வந்து சேர்ந்தார்.

10. அதன்பின் தம் தாய் நாடாகிய அமெரிக் காவை அடைந்தார். அப்பொழுது அவருக்கு அளிக்கப் பட்ட வரவேற்புகள் பலவாகும். அவர்பெருமை ஒலி பெருக்கியின் மூலம் உலகம் எங்கும் பரப்பப்பட்டுப் பாராட்டப் பட்டது. இன்னோரன்ன பெரியார்களைச் "செயற்கரிய செய்வார் பெரியர்" என்று கூறுவதில் தடையுண்டோ?

அருஞ் சொற்கள்

எண்ணில் - கணக்கில்லாத, மீன்கள்-நட்சத்திரங்கள், பரிதி - சூரியன், தாரகை - நட்சத்திரம் உடுக்கள்-

நட்சத்திரங்கள், ஈர்த்து-இழுத்து, விண்ணில் - ஆகாயத்தில், விசும்பு-ஆகாயத்தில், ஈண்டு - இங்கு, அறையின் - சொல்லினால் புள் - பறவை, அரிய - கடினமான, இழவு - செலவு, சேதம், நாவாய் - கப்பல், குழுவினை - கூட்டத்தினை, உன்னி-நினைத்து, செலவு-பயணம், ஆக்கம் - உயர்வு, கலம்-கப்பல், செல்லாறு-செல்லும்வழி, இன்னல்கள் - துன்பங்கள், துய்த்து-அனுபவித்து, சகடங்கள் - வண்டிகள்.

## கேள்விகள் :

1. பியரி என்பவர் யார்? அவர் எதைக் காண முயன்று வந்தனர்?
2. கிரீன்லாந்தைக் கண்டவர் யார்?
3. பியரிதிருக்கு ஆக்க ஊக்கம் அளித்தவர் யார்?
4. அவருடன் சென்றவர்கள் யாவர்?
5. அவர் எப்பொழுது வடதுருவத்தில் தம் நாட்டுக் கொடியை நிலை நாட்டினர்?

## பயிற்சி :

1. நட்சத்திரத்தைக் குறிக்கும் சொற்களை எடுத்து எழுது?
2. வானட்சத்திரங்களைப்பற்றிச் சில வாக்கியம் எழுது?
3. ரூஸ் வெல்ட், ஹென்சலன் - குறிப்பு வரைக?
4. பியரியைப் போலச் செயற்கரிய செயலைச் செய்த ஒருவரது வரலாற்றைக் கேட்டு எழுது?

## இலக்கணம் :

### வலிமிகு மிடங்கள்

i. அ, இ, என்னும் சுட்டெழுத்துக்கள், எ, என்னும் வினா, எழுத்து ஆகிய இவை வல்லின மெய்யை முதலாகக்

கொண்ட சொற்கள் தம்மோடு வந்துபுணர்ந்தால், அந்த வல்லினம் மிகும். இச்சுட்டு வினா எழுத்துக்கள் திரிந்து வந்தாலும் வலி மிகும்.

| | | |
|---|---|---|
| அ + பையன் | = அப்பையன் | சுட்டுடன் |
| இ + காடு | = இக்காடு | வல்லினம் |
| எ + தட்டு | = எத்தட்டு | வரமிகுந்தது |

| | | |
|---|---|---|
| அந்த + பெட்டி | = அந்தப்பெட்டி | சுட்டுவினா |
| இந்த + தட்டு | = இந்தத்தட்டு | திரிந்த |
| எந்த + பையன் | = எந்தப்பையன் | போதும் |
| எப்படி + தந்தாய் | = எப்படித்தந்தாய் | வல்லினம் |
| அப்படி + சொல் | = அப்படிச் சொல் | வரமிகுந்தது |
| இப்படி + பார் | = இப்படிப்பார் | |

ii. எலியைப்பிடி, விலைக்குக்கோடு என்னும் தொடர்கள்முறையே இரண்டாம் வேற்றுமையைப் பெற்றும், நான்காம் வேற்றுமையைப் பெற்றும் வந்துள்ளன. இப்படி இரண்டாம் வேற்றுமை நான்காம் வேற்றுமைகளுடன், வல்லினச் சொற்கள் வருமொழியாகவரின் வல்லினம் மிகும்.

iii. பெரும்பாலும் உயிர் ஈற்றுச் சொற்களோடு வல்லினம் வருமொழியாகவரின் மிகும்.

(உ-ம்) ஆட + சென்றான் = ஆடச்சென்றான்.
ஓடா + குதிரை = ஓடாக்குதிரை.
நொடி + பொழுது = நொடிப்பொழுது.

## குற்றுகரப் புணர்ச்சி

நாடு + ஆண்டான் என்னும் சொற்கள் சேர்ந்தால் எப்படிச் சேரும். நாடாண்டான் என்றல்லவா புணரும், இச்சேர்க்கையால் என்ன அறிகின்றீர்கள்? நிலமொழியீற்றில் உகரம் இருந்து, வருமொழி முதலில் உயிர் எழுத்து

வந்தால், குற்றுகரத்தில் இருந்த உகரம் நீங்கி, நின்றமெய் யோடு வந்த உயிர் சேர்ந்து புணரும் என்பதனை உணர் கின்றீர்கள் அல்லவா?

(உ-ம்) நாடு + ஆண்டான்.—நாடாண்டான்.
நாட் + ஆண்டான்.
நா (ட் + ஆ)ண்டான்

பயிற்சி:

1. கீழ்வருவன இன்ன காரணத்தால் வலிமிகுந்து காணப்படுகின்றன எனக் குறிப்பிடு. ஒலிவிட்டுக் கொண்டு, கண்ணுக்குத் தோன்றாமல்; மேகப் படலம், சிறப்புக் கூறுதற்கு, பேசப்படுகின்றன. அப்பல் கோடி, கருத்துக்களைத் தம்பால், தம்மைப் பற்றி, துருவத்தைப்பற்றிச் சிறிது, பனிக்கட்டிகள்.
2. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக. மூன்றாண்டுகள், விளக்காயினும், நூற்றைம்பது, இல்லிருந்து.

## 10. நீர்ப்பாசனம்


1. "மழையின்றி மானிலத்தார்க்கு இல்லை" என்பதை நாம் நன்கு உணர்வோம். மழை மக்களுக்கு மிக மிக இன்றியமையாதது என்பதை அறிந்த வள்ளுவர் தம் பொது மறையில் 'வான் சிறப்பு' என்னும் தனி அதிகாரத்தை வகுத்துப் பத்துக் குறட்பாக்களில் மழையின் சிறப்பைக் கூறுகிறார். மழையில்லையானால் ஓரறிவு உயிராகிய பசும்புல்லும் தலைகாட்டாது. ஏரால் உழவர் உழுதலைச் செய்ய இயலாது. இம் மழை, உணவுப் பொருள்களை உண்டுபண்ணுதற்கு உதவியாய்

இருப்பதோடு நில்லாமல், தானும், ஓர் உணவுப் பொருளாகக் குடிப்பதற்குப் பயன்படுகிறது. நீரை மிகுதியாகப் பெற்ற கடலுக்கும் மழை தேவையாக இருக்கிறது என்றால், வேறு என்ன கூறுவது? கடலில் மழை பொழியவில்லை என்றால், கடல்படுபொருள்களாகிய முத்தும், பவளமும் தோன்றமாட்டாவாம்.

2. இத்தகைய சிறப்பு வாய்ந்த மழை நம் முன்னோர்கள் காலத்தில் மாதத்திற்கு மூன்று மழையாகப் பொழிந்து வந்ததாம். இதனால், "மாதம் மும்மாரி பொழிந்தது" என்று கூறும் வழக்கையும் காணலாம். இந்த மழைநீர் என்றும் தமக்குப் பயன்படும் பொருட்டு நம் முன்னோர் ஏரி, குளம், கிணறு முதலியவற்றை ஏற்படுத்திக் கொண்டனர். மழை நீர் பூமியில் பொழிந்து, மண்ணில் ஊறிவிடுவதால், அம்மண்ணைத் தோண்டுங் காலத்தில் பூமியிலிருந்து நீர் சுரக்கத் தொடங்கும். அச்சுரப்பு நீரே கிணற்று நீர் எனப்படும். இதனைத்தான் நாயனார் "தோட்டனைத்து ஊறும் மணற்கேணி" என்று கூறியுள்ளார். குளங்களும் செய்நீர் நிலைகளேயாகும். பள்ளமாக நிலப்பகுதி அமைந்த இடங்களில் மழை நீர் தேங்கித் தடமாக அமைதலும் உண்டு. மலைகளையும் குன்றுகளையும் அடுத்துள்ள சமவெளிகளில் சுற்றிலும் கரைகளை எடுத்து, மழை நீர் வீணே போய் விடாதபடி தேக்கிவைத்தனர். அத்தேக்கமே ஏரி எனப்படும். ஏரைக்கட்டி நிலங்களை உழுதற்கு இந்நீர் பெரிதும் பயன்படுதல் கருதி, இதனை ஏரி எனப் பெயரிட்டு, நம் முன்னோர் வழங்கியதை அறிந்து, நாம் அவர்கள் நுண்ணறிவைப் பாராட்ட வேண்டுமல்லவா?

3. இவ்வாறு அமைந்த நீர் வசதிகளைக் கொண்டு தான், நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சிப் பயிர் பச்சைகளைப்

பெருக்கி வந்தனர். பருகும் நீராகப் பயன்படுத்தியும் வந்தனர். மழைபெய்து கொண்டே இருந்தால்தான் நீரைப் பெறமுடியும். மழைபெய்யாது தடைப்பட்ட போது, விளைவு குன்றிப் பஞ்சமும் பசியும் தோன்றி மக்களை மாழ்கச் செய்யும். இதனைப் பொய்யில் புலவராம் வள்ளுவப் பெருந்தகையார் எவ்வளவு தெளிவாகக்




கிருஷ்ணா அணை.

கூறுகிறார் பாருங்கள்! "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகம் உள்நின்று உடற்றும் பசி" என்கிறார். ஆகவே, இம்மழை பொழியுங் காலத்தில் அதன் நீர் எல்லாம் வீணே பூமியில் ஓடிக்கடலில் கலந்து விடாதபடி, ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டி நீரைத் தடை செய்து விடுகின்றனர். மழை பெய்யுங் காலங்களில் சமவெளிகளில் நீர் ஓடும் இடமே ஆறு எனப்படும். இவ்வாறு ஓடிவரும் ஆற்றினை அச்சமவெளிகளை

அமைத்து வாழும் மக்கள் ஆழமாக வெட்டி நெடுகக்கரை எழுப்பி, வேண்டுமிடங்களில் மதகுகளைக்கட்டிச் சிறு சிறு கால்வாய்களின் மூலம் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சிக் கொள்வர். இந்த வாய்க்கால்கள்தாம் கிளை நதிகள் சிற்றாறுகள் எனப்படும். பேர் ஆறுகளின் இடையே தான் அணைகளைக் கட்டுவர். இவ்வணைக் கட்டுகளை வடக்கே தெலுங்கு ஜில்லாக்களில் கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். மைசூரில் காவிரியாற்றுக்கு இடையில் கண்ணம்பாடி என்னும் பெயருடன் ஓர் அழகிய அணைகட்டப்பட்டிருப்பதை எவரும் கண்டுகளிக்கவேண்டியதாகும். தென்னாட்டிலும், பல அணைக்கட்டுகள் இருக்கின்றன. அவற்றுள் சிறந்தது மேட்டூர் அணைக்கட்டாகும். இவ்வணைக்கட்டுச் சேலத்துக்கு அருகேயுள்ள மேட்டூர் என்னும் இடத்தில் கட்டப்பட்டது. இந்த அணைக்கட்டைக் கட்டி முடிக்க ஐந்துகோடி ரூபாய் செலவாயிற்று என்றால், இது ஒரு பெரிய அணைக்கட்டுதான் என்று கூறுவதில் ஐயம் ஏற்படுமா? இவ்வணைக்கட்டினின்றும் சிற்சில கால்வாய்களை ஏற்படுத்த மேலும் இரண்டு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இதனைக் கேட்கும் போது, இதன் பெருமையை மேலும் மதிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த அணைக்கட்டினால் லட்சக் கணக்கான நிலங்கள் நன்கு நீரைப் பாய்ச்சப் பெற்றுச் சாகுபடியைத் தந்து வருகின்றன.

4. நம் நாட்டில் கிணற்றின் அருகேயே ஏற்றங்களை அமைத்து நீர் இறைத்தும், மாடுகளைக் கொண்டு கமலையடித்தும் நிலங்களுக்கு நீரைப்பாய்ச்சி வந்தனர். ஆறுகளைச் சிறு கால்வாய்களாகத் திருப்பி நிலங்களுக்கு நீர் பாய்ச்சி வந்தனர். இந் நீர்ப்பாசன வசதிகளுக்கும் மழை பெய்யாத காலங்களில் தடை ஏற்படக்கூடும்.



மேட்டூர் அணை.

ஆனால், முன்னே கூறிய அணைக்கட்டுகளால் நீர்த்தேக்கப் பட்டிருப்பதனால், மழை மிகுதியும் பெய்யாத காலங்களி லும் நிலங்களுக்கு நீரைப்பாய்ச்சி வேளாண்மையைப் பெருக்கலாம். ஏரி, குளம், குட்டை, கேணி, இவற்றின் நீர் சூரிய வெப்பத்தால் சுண்டிவிடுதல் போல, அணை நீர் விரைவில் சுண்டாமல் கடல்போல நீர் தேங்கி இருக் கும். ஆதலால், அணைக்கட்டே நீர்ப்பாசனத்திற்குச் சிறந்த வசதியுடையதாகும். அணைக்கட்டினால் பயிர் பச்சைகளுக்கு மட்டுந்தான் பயன் ஏற்படும் என்று கருதிவிடக்கூடாது. இவ்வணைக்கட்டுகளால் மின்சார உற்பத்தியும் நடைபெறுகின்றது. இம்மின்சார உதவி கொண்டு, தொழிற்சாலைகளுக்குத் தகுந்த மூலப் பொருள்கிடைக்கும் இடங்களில், பல தொழிற்சாலைகள் தோன்ற வசதி ஏற்படுகிறது. அத் தொழிற்சாலைகளால் பல்லாயிரம் மக்கட்குவேலை கிடைக்கிறது. இவை அனைத்தும் உண்மை என்பதற்கு மேட்டூர் அணைக் கட்டே போதிய சான்றாகும். நாம் கட்டும் மேட்டூர் மல் எனப்படும் ஆடைகள் அங்குள்ள சாலையில் நெய்யப் பட்டு வருவனவே.

5. அணைக்கட்டினால் உழவும் தொழிலும்செழித்து ஓங்கிவருகின்றன. உழவும் தொழிலும் நிறைந்த நாடு செழித்து ஓங்கிவளரும் என்பதைக்கூறவும் வேண்டுமோ? இதனால் அன்றோ நம் பாரதியாரும், ''உழவுக்கும் தொழி லுக்கும் வந்தனை செய்வோம்'' என்று களிப்புடன் பாடு வாரானார். இத்தகைய நீர்ப்பாசன வசதிகள் மேன் மேலும் பெருகுவதாக.

அருஞ் சொற்கள் :

மாநிலம் - பெரியநிலம், வான் சிறப்பு - மழையின் சிறப்பு, பொதுமறை - திருக்குறள், துப்பு - பவழம்,

தாளம் - முத்து, மாரி - மழை, தொட்டனைத்து - தோண்டிய அளவுக்கு, கேணி - கிணறு, தடம் - குளம், மாழ்க - வருந்த, விரிநீர் - கடல், வியன் - விசாலமான, உடற்றும் - வருத்தும், ஐயம் - சந்தேகம், வேளாண்மை - பயிர்த்தொழில், சான்று - உதாரணம்.

### கேள்விகள் :

1. மழை இன்றெனின் எவையெவை நிகழும்?
2. நம் முன்னோர் எங்ஙனம் நீரைப் பெற்று வந்தனர்?
3. அணைக்கட்டுகள் ஏன் கட்டப்படுகின்றன?
4. மேட்டூர் அணைக்கட்டுப் பெரிய அணைக்கட்டு என்பது எவ்வாறு தெரிகிறது?
5. அணைக்கட்டுகளினால் ஏற்படக் கூடிய பயன்கள் யாவை?

### பயிற்சி :

1. அணைக்கட்டு உள்ள சில இடங்களைக் குறிப்பிடு.
2. 'விண்ணின்று பொய்ப்பின்' என்னும் குறளில் அடங்கிய பொருளைத் தெளிவாக எடுத்துக்காட்டு.
3. ஆறு, ஏரி, இப் பெயர்களுக்குரிய காரணங்களை விளக்கி எழுது?

### இலக்கணம்:

## உடம்படு மெய்

மணி + அழகு, என்ன வாகும்? மணியழகு என்று ஆகும். பல + அரசர் என்னவாகும்? பலவரசர் என்று ஆகும். ஆகவே, இவ்விரு தொடருக்கு நடுவில் எந்தெந்த எழுத்துக்கள் தோன்றின? ய், வ் என்னும் எழுத்துக்கள் தோன்றின. எனவே, இம்மெய்கள் உடம்படு மெய்கள் என்று கூறப்படும்.

பயிற்சி :

1. கீழ்வரும் தொடர்களைப் பிரித்து இடையில் எக் காரணங்கொண்டு ய், வ் என்னும் உடம்படு மெய்கள் தோன்றின எனக்குறிப்பிடு.

மழையின்றி, பொழியவில்லை, அருகே யேற் றங்களை, கிளியழகு, பூவழகு, நிலாவொளி, பல வாடுகள், பணியாள், தேவாரம், கோவில்,

## 11. கூட்டுறவு இயக்கம்

*1.* உலகில் சிற்சில செயல்கள் தனித்துச் செய் வதைவிட ஒன்று கூடிச் செய்வதனால் நன்கு நடக்கக் கூடியனவாகவும், பயன்தரத் தக்கனவாகவும் இருக்கின் கின்றன. ஆங்கிலத்தில் கூறப்படுகின்ற "ஒற்றுமையே பலம்" என்னும் பழமொழியிலிருந்தும் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்னும் பைந்தமிழில் வழங்கிவரும் பழமொழியிலிருந்தும், இக் கருத்தினை நன்கு வலியுறுத் தலாம். கூட்டுறவு முறையில் நடத்தப்படும் நடவடிக் கைகளால், கைத்தொழில், சமூகம், முதலியன திருத்த மடைந்து பயன் பெரிதும், எதிர்பார்க்கக் கூடியதாய்க் காணப்படும். உணவு நெருக்கடி, பணமுடை, பொருள் களின் தேவை போன்ற வாழ்க்கைக்கு இன்றியமை யாதவற்றை நல்ல முறையில் தீர்த்துக் கொள்ளலாம்.

*2.* இக் கூட்டுறவு இயக்கத்திற்கு ஆதித் தந்தை ஜர்மானிய தேசத்து ரைபீஸன் என்னும் அறிஞரே யாவார். இவர் தம் நாடாகிய ஜர்மானி தேசம் *1847-48*—ஆம் ஆண்டில் பஞ்சத்தால் வாடி

வதங்கி, உணவு நெருக்கடி ஏற்பட்டுக் குடியானவர்களும், பொதுமக்களும் அல்லலுறுவதைக் கண்கூடாகக் கண்டார். குடியானவர்கள் பட்ட இடுக்கண் ரைபீஸன் உள்ளத்தை வருத்தியது. அவர்கட்கு ஏதேனும் ஒரு வழியைக் கண்டு, அவர்கள் நல்வாழ்வு எய்துதற்கு முயல்வாரானார். அம்முயற்சியின் பயனே கூட்டுறவு இயக்கமாகும். அவர் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திப் பல அங்கத்தினர்களைச் சேர்த்து, அதில் சொற்ப முதலைக் கொண்டு, தானியங்களையும் காய்கறி கிழங்கு வகைகளையும் வாங்கி அங்கத்தினர்களாக இருப்பவர்கட்கு இலாபம் கருதாது விற்று வந்தார். கால் நடைகளை வாங்கி ஏழைக்குடியானவர்கட்கு விற்று வந்தார். கால்நடைகளை வாங்குவதற்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்துதவச் செல்வர்களின் உதவியை நாடினார். இச் செல்வர்கட்கும் குடியானவர்க்கும் இடையில் சங்கத்தை உத்தரவாதமுள்ளதாகப் பொறுப்பினைக் காட்டினார். பணத்தைச் செல்வந்தரிடம் குறைந்த வட்டிக்கு வாங்கி உதவி வந்தனர். இதனால், குடியானவர்கள் அடைந்த நன்மை அனந்தமாகும். இவ்வாறு பணம் கொடுத்து உதவி வருவது குறித்து ஒருசட்டம் 1862-ஆம் ஆண்டு வகுக்கப் பட்டது. அச்சட்டம் சங்கத்தில் கடன் பெறுபவர்களின் கூட்டு உத்தரவாதம் என்னும் கூட்டுறவு விதியாகும். இக் கூட்டுறவு முறையினால் அளக்க ஒண்ணாத பயன்கள் ஏற்பட்டதனால், உலகெங்கும் இவ்வியக்கம் தோன்றலாயின. ஸாக்ஸனி மாகாணத்தில் டெலிட்ஷ் என்னும் சிறிய பட்டணத்தில் பிறந்த ஷூல்ஸ் என்பவர் பலசங்கங்களை நிறுவினர். ரஷ்யாவிலும், ஆஸ்திரேலியாவிலும், பிரான்ஸிலும், ஜப்பானிலும் எண்ணிறந்த கூட்டுறவுச் சங்கங்கள் எழலாயின.

3. இனி இந்தியாவில் இவ்வியக்கம் தோன்றிய வரலாற்றைச் சிறிது சிந்திப்போமாக. தொன்று தொட்டு நம் நாட்டிலும் கூட்டுறவு முறைகளில் பஞ்சாயத்துக்கள் கொடுக்கல் வாங்கல் முதலியன நடந்து வந்தன. பஞ்சாயத்து முறையால் கிராமங்கள் நன்முறையில் பரிபாலிக்கப்பட்டன, என்பதைக் கூறலாமேயன்றிக் கொடுக்கல் வாங்கல் முறையில் பல இடையூறுகள் குடியானவர்கட்கு இருந்தே வந்தன. இதனைப் பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த பூனுவில் நீதிபதியாக இருந்த சர் வில்லியம் வெடர்பான் என்பவர் அறிந்து இவர்கள் படும் கடன் தொல்லையை ஒழிக்க முன் வந்தனர். இதன் பொருட்டு 1882-ஆம் ஆண்டு, இந்திய அரசாங்கத்தினருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தனர். ஆனல், அரசாங்கம் இவருடைய வேண்டுகோளை நிராகரித்து விட்டது. என்றாலும், இது குறித்துச் சிற்சில ஆராய்ச்சிகள் மட்டும் நடந்து வந்தன. 1901-ஆம் ஆண்டில் ஐக்கிய மாகாணத்தில் பல ஐக்கிய நாணயச் சங்கங்கள் தோன்றின. இவற்றைத் தோற்றுவித்தவர் சர் அந்தோணி மாக்டோனல் என்பவர். இவ்வாறு இச் சங்கங்கள் தோன்றி நல்லமுறையில் நடந்து வருவதைக் கவனித்த சர்க்கார், "இத்தகைய சங்கங்களுக்கு அரசாங்கத்தின் ஆதரவும் இருந்தால் நல்லதே ஆகும்" என்று உணர்ந்து அதன்பொருட்டு, ஓர் ஆலோசனைக் குழுவினை ஏற்படுத்திச் சில சட்டதிட்டங்களை வரைந்தனர். இவை வரையப்பட்ட காலம் 1904-ஆம் ஆண்டாகும். அச் சட்டங்களின் அடிப்படியானவை, ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கு அரசாங்கம் உதவுவது என்பதும், கணக்குகளைத் தணிக்கை செய்வது என்பதும் ஆகும். இதன்பின் பல சங்கங்கள் கிளைக்கத் தொடங்கின.

4. ஐக்கிய நாணயச் சங்கத்தின் தோற்றத்திற்குப் பிறகு பலவகையான சங்கங்களும் உண்டாகத் தொடங்கின. அவற்றை ஐந்துவகையாகப் பிரிக்கலாம். அவை: (1) குறைந்த வட்டிக்குக் கடன்கொடுக்கும் சங்கம், (2) உழவுக்குரிய துணைக்கருவிகளை வாங்கியுதவும் சங்கம், (3) கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம், (4) வீடு கட்டிக்கொள்ள உதவிபுரியும் சங்கம், (5) தொழிலாளர்கட்கு உதவும் சங்கம் என்பன.

5. இச்சங்கங்களின் பயனை நன்கு உணர்ந்தவர்கள் தென்னிந்தியர்கள் என்றுகூடக் கூறிவிடலாம். இவற்றுள் விவசாயிகட்குக் கடன்கொடுத்து உதவும் ஐக்கிய நாணயச் சங்கமே பெரிதும் நடைமுறையில் இருந்துவருகின்றது. இச்சங்கம் சில நிபந்தனைகளுக்குள் நல்ல முறையில் நடந்துவருகிறது. இச் சங்கத்தில் சேரும் அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் நன்கு தெரிந்தவர்களாய், யோக்கியர்களாய் நல்ல உழைப்பாளிகளாய் இருக்கவேண்டும் என்பது முதல் விதியாகும். இந்த நிபந்தனைக்கு உள்படாதவர்களைச் சங்கத்தில் இணைத்துக்கொண்டால், அவர்களுக்குக் கொடுக்கும் தொகை விழலுக்கு இறைத்த நீர்போல் பயன் இன்றிப் போகும் அல்லவா? இந்நிபந்தனைகளை மேற்கொள்வது மிகமிகப் பொருத்தமானதேயாகும். இவ்வாறு பொறுப்புவாய்ந்த அங்கத்தினர்கள் சங்கத்திலிருந்து கடனாகப் பெறும் தொகையை "எதற்காக வாங்குகிறோம்" என்று தாம் கொடுத்த மனுவில் தெரிவித்துக்கொண்டார்களோ அந்தக் காரியத்திற்கே செலவழிக்கப்பட வேண்டும். இதனை உதாரண மூலமாக விளக்கினால், நீங்கள் நன்கு உணர்வீர்கள். ஓர் உழவன் தன் நிலத்தை ஒரு செல்வனிடத்தில் அடகு வைத்திருந்தான் என்று வைத்துக்கொள்

வோம். உழவன் வாங்கிய தொகைக்கு வட்டி செலுத்த முடியாமல், முதலும் வட்டியுமாகச் சேர்ந்து நிலமே தன் கைவசமிருந்து போய்விடும்போல் இருக்கும் என்பதை அறிந்து, நிலத்தை மீட்டுக்கொள்ளப் பண உதவி செய்யச் சங்கத்தை நாடுகிறான். அவன் நிலையை அறிந்து சங்கமும் பணம் கொடுத்து உதவுகிறது. அப்படி உதவிய பணம் நிலத்தை மீட்கப் பயன்படுத்தப்படாமல், தன் மகள் திருமணத்திற்குச் செலவு செய்து விடுவானாறல், இது சட்ட விரோதமாகக் கருதப்பட்டது.

6. சங்கத்தில் அங்கத்தினர் பதவி ஏற்பதற்குச் செலுத்தப்படும் நுழைவுக் கட்டணம் சிறிய தொகையே யாகும். பங்குத் தொகையும் சொற்பமானதே யாகும். பணம் சிறுவட்டிக்குக் கொடுக்கப்படுவதனால், சிற்சில சங்கங்களில் இலாபமும் ஏற்படுவதுண்டு. அவ்விலாபப் பொருளில் ஒரு சிறுதொகையைச் சேம நிதிக்கெனவும், பொது நலத்துக்கெனவும் எடுத்துக்கொண்டு, மிகுந்ததைச் சங்கத்தில் பணிபுரியும் செயலாளர், கணக்கர் முதலிய சிப்பந்திகட்கு மாத ஊதியமாகக் கொடுத்து வருவர். இதற்குமேலும் பணம் மிகுந்து காணப்பட்டால், அங்கத்தினர்களின் பங்குகட்கு ஏற்றபடி பிரித்துத் தருவர்.

7. மாணவர்களே! கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு தோன்றின? எப்படி நடைமுறையில் நடக்கின்றன? இவற்றால் ஏற்பட்டுள்ள நன்மைகள் என்ன? என்பதை ஒருவாறு உணர்ந்துகொண்டீர்கள். இச்சங்கத்தால் ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்து கொள்ளும் நல்லியல்பு ஏற்படுவதனால், இச்சங்கம் நல்ல முறையில் நடக்க நம்ம

வர்கள் உதவி புரியவேண்டுவது கடமையும், உரிமையும் ஆகும்.

### அருஞ் சொற்கள் :

இடுக்கண் - துன்பம், எய்துதற்கு - அடைவதற்கு, இடையூறு - துன்பம், குழு - கூட்டம், வரைந்தனர்— எழுதினர், தணிக்கை செய்வது - பரிசோதனை செய்வது, கிளைக்க - உண்டாக, நிபந்தனை - சில கட்டு திட்டங்கள், விழலுக்கு - வீணுக்கு, சேமநிதி - சேர்த்து வைக்கப்பட்ட பொருள்.

### கேள்விகள் :

1. கூட்டுறவால் எவ்வெவ் நன்மைகள் ஏற்படும்?
2. முதல் முதல் கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?
3. இந்தியாவில் இவ்வியக்கம் எவ்வாறு கிளைக்கலாயின?
4. ஐந்துவகைச் சங்கங்கள் எவை?
5. ஐக்கிய நாணய சங்கத்தில் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் யாவை?
6. இலாபம் எவ்வாறு செலவு செய்யப்பட்டன?

### பயிற்சி :

1. பஞ்சாயத்து, சர் அந்தோணி மாக்டொனல்— சிறு குறிப்பு வரைக.
2. கூட்டுறவு இயக்கம் என்னும் பொருள் பற்றித் தமிழ்ச் சங்கத்தில் பேசுதற்குக் குறித்துக் கொள்ள வேண்டிய குறிப்புக்களைக் குறித்துக் காட்டு.

## இலக்கணம் :

### ண், ள், ல், ன் முன் தகரம் திரிதல்.

காண் + தரு, வாள் + தொழில், கல் + துணை, முன் + தானை—இவற்றைச் சேர்த்துப் பாருங்கள். இவற்றைச் சேர்த்தால் காண்டரு, வாட்டொழில், கற்றுணை, முன்றானை எனச் சேரும் அல்லவா? இதனால் என்ன அறிகின்றீர்கள். நிலைமொழியீற்றில் ண், ள் என்னும் மெய்கள், நின்று வருமொழி முதலில் தகரமெய் வந்தால், தகரம் டகரமாகும் என்றும், நிலைமொழி ஈற்றில் ல், ன் என்னும் மெய்கள் நின்று, வருமொழி முதலில் தகரம் வந்தால், தகரம் றகரமாகும் என்றும் அல்லவா அறிகின்றீர்கள். இவ் விதிகளை மனத்தில் கொள்ளுங்கள்.

## பயிற்சி :

1. கடற்றுவுபடலம். பொற்றுகள், ஆண்டகை, வாட்டிறன், இவன்றந்தை. சொற்றுணை, நற்றுணை, கற்றுழை.—இத்தொடர்களைப் பிரித்து, இவ்வாறு புணர்ந்துள்ளமைக்குக் காரணமும் கூறு.

# I. தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை;
ஆவினுக் கருங்கலம் அரசனஞ் சாடுதல்;
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது;
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே. 1

—திருநாவுக்கரசர்.

## பிரபந்தம்

குலந்தரும்; செல்வந் தந்திடும்; அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரம் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம். 2

—திருமங்கையாழ்வார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா!
வித்தகா! ஞானசத் திநிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே! 3

—அருணகிரிநாதர்.

## சகல கலாவல்லி மாலை

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே! 4

—குமர குருபரர்.

## இரட்சணிய யாத்திரிகம்

நன்னெறி புகுத்திடும்; நவையின் நீக்கிடும்;
இன்னலை அகற்றிடும்; இகல்செகுத்திடும்;
உன்னதத் துய்த்திடும்; ஒருங்கு காத்திடும்;
எந்நலத் தையும்தரும் ஏசு நாமமே. 5

—கிருஷ்ணப் பிள்ளை.

## நீதி நூல்

அகவிருள் அகல ஞான விளக்கினை அருளி னேற்றிச்
சகலமும் நல்கும் கேள்வித் தனத்தினை நல்கி யாதிப்
பகவன்தன் வடிவம் காட்டிப் பவமறம் இரண்டும் [காட்டிச்
சுகநிலை காட்டுந் தியாகத் தோன்றலை மறவாய் நெஞ்சே! 6

—வேதநாயகம் பிள்ளை.

## ஆசிரியர் வரலாறு

1. திருநாவுக்கரசர் நடுநாட்டில் திருவாமூரில், புகழனார் மாதினியார் என்னும் இருவர்க்கும் புத்திரராகப் பிறந்தார். இவர் பிறந்த காலத்தில் இவர்க்கு மருணீக்கியார்

என்பது பெயர். இவர் காலத்து மன்னர் மகேந்திரவர்ம பல்லவன். இவர்காலம் கி. பி. ஆறும் நூற்றாண்டு. இவருக்குத் திருநாவுக்கரசர் என்னும் பெயர், சிவபெருமானால் கொடுக்கப்பட்டது. இவருடைய தமக்கையார் பெயர் திலகவதியார் என்பது. இப்பாடல் இவர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலில் மிதந்துவந்து கரையேறிய போது பாடப்பட்டது.

அருஞ் சொற்கள் :

அருங்கலம் - ஆபரணம், ஆ - பசு, அரன் - சிவபெருமான், அஞ்சு ஆடுதல் - பசுவினிடத்திலிருந்து பெறும்படியான பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் ஐந்தையும் அபிடேகப் பொருளாகக் கொண்டு மூழ்குதல். கோ - அரசன், கோட்டம் - நீதியினின்று தவறுதல், நமச்சிவாய - சிவமந்திரங்களில் சிறந்த மந்திரம்; இதனைப் பஞ்சாட்சர மந்திரம் என்பர். தேவாரம் கடவுளுக்குச் சூட்டப்பட்ட பாமாலை.

2. திருமங்கையாழ்வார் நீலன் என்பாருடைய திருமகனார். திருக்குறையலூரில் கள்ளர் மரபில் தோன்றியவர். இவர் சோழ மன்னரிடத்தில் படைத்தலைவராய் இருந்து பல வெற்றிகளை வாங்கித்தந்தமையால் இவர்க்கு ஆலிநாடு வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. அதனால், இவர் ஆலிநாடர் என்றும் பெயர் பெற்றனர். இவர் தம் மனைவி காரணமாகச் சிறந்த விஷ்ணுபக்தராக மாறினார். இவர் பாடிய நூல் பெரிய திருமொழி, இவர் காலம் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு.

அருஞ் சொற்கள் :-

நிலந்தரம் செய்யும் - இல்லாமல்செய்யும், விசும்பு - தேவலோகப்பதவி, பெருநிலம் - மோட்ச உலகம்.

நாமம் - பெயர், வலம் - வெற்றி, ஓம் நமோ நாராய ணாய - இது வைஷ்ணவ எட்டாக்ஷரமந்திரம் எனப் படும். நாமம் - பெயர், பிரபந்தம் - நூல், புத்தகம்.

3. அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் இன்றைக்கு ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் பிரபுட தேவமகாராஜன் காலத்தில் இருந்தவர். முருகப்பெருமான் திருவருள் பெற்றுத் திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், திருவகுப்பு முதலிய முருகனைப் பற்றிய பாடல் நூல்களைப் பாடியுள்ளார்.

அருஞ் சொற்கள்:

மா - சிறந்த, முத்தன் - மோட்சத்திற்கு உரியவன், ஆமாறு - ஆகும்படி, சற்குணர் - நல்ல குணமுடையவர், நேயா - அன்பனே, மாமணிக்கிரி - சிறந்த இரத்தினகிரி, வித்தகா - அறிஞனே! ஞானசத்தினிபாதா - பக்குவப்பட்ட அன்பர்களிடத்தில் திருவருளைக் காட்டுவோனே.

4. கிருஷ்ணபிள்ளை பத்தொன்பதாம் நூற்றாண்டு புலவர். இவர் முதலில் வைஷ்ணவராய் இருந்து பின் கிறிஸ்தவராக மாறியவர். இவர் பாளையங் கோட்டையில் பிறந்தவர். திருநெல்வேலியில் தமிழ் ஆசிரியராக இருந்தவர். இவர் எழுதிய வேறு நூல்கள் ரட்சண்ய மனோகரம், ரட்சண்ய குறள் என்பன.

அருஞ் சொற்கள் :

நெறி - வழி, நவை - குற்றம், இன்னல் - துன்பம், இகல் - பகைமை, செகுத்திடும் - அழித்திடும்,

உன்னதத்து - உயர்ந்த நிலையில், உய்த்திடும் - கொண்டு சேர்த்திடும்.

5. ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள் திருநெல்வேலியைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் சண்முக சிகாமணிக் கவிராயர் என்பவருக்குப் பிள்ளையாகச் சைவ வேளாள மரபில் இன்றைக்கு முன்னூறு வருடங்களுக்கு முன் பிறந்தார். இளமையில் ஊமையாக இருந்து பின் திருச்செந்தூர் முருகன் திருவருளால் அது நீங்கப் பெற்றுக் கவிபாடும் வன்மையும் அடைந்தார். இவர் காலத்துச் சிற்றரசர் மதுரைத்திருமலை நாயக்கர். இவர் இச் சகல கலாவல்லி மாலையைத் தாம் இந்துஸ்தான் மொழியைப் பேசவேண்டும் என்பதற்காகக் கலைமகளை வேண்டிப்பாடியதாகும். இவர் பல நூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் சில காசிக் கலம்பகம், மதுரைக் கலம்பகம், நீதி நெறிவிளக்கம் முதலியன.

அருஞ் சொற்கள் :

பண் - இசை, பரதம் - நாட்டியம், தீஞ்சொல் - இனிய சொல், பனுவல் - சாஸ்திரம், விண் - ஆகாயம், புனல் - நீர், கால் - காற்று.

6. ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை. இவர் 19-ஆம் நூற்றாண்டுப்புலவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தினர். மாயூரத்தில் டிஸ்டிரிக் முன்சீப்பாக இருந்தவர். நல்ல தமிழ் அறிவு பெற்றவர். இவர் எழுதிய நூற்கள் பிரதாப முதலியார் சரித்திரம், பெண்மதிமாலை, சர்வசமயக் கீர்த்தனை முதலியன.

அருஞ் சொற்கள் :

அக இருள் - மன இருள், நல்கும் - கொடுக்கும், பவம் - பாவம், அறம் - புண்ணியம், தியாகத் தோன்றல் - ஆசிரியர்.

## கேள்விகள் :

1. 'அஞ்சு' என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
2. 'நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே' என்று கூறுவதால் நாம் செய்ய வேண்டுவது யாது?
3. நாராயண மந்திரம் எவ்வெவற்றைத் தரும்?
4. அருணகிரியார் முருகப் பெருமானை வேண்டும் வரம் யாது?
5. ஏக நாமத்தின் மகிமை யாது?
6. கலைமகள் எங்கெங்கு நிறைந்துள்ளாள்?
7. குமர குருபரர் வேண்டும் வரம் யாது?
8. இப்பாடல் எப்பொழுது பாடப்பட்டது?
9. தியாகத் தோன்றல் யார்?
10. இத்தோன்றல் செய்யும் நன்மைகள் யாவை?

## பயிற்சி :

1. தேவாரம் பாடிய மூவர் பெயர்களைக் குறிப்பிடு.
2. பிரபந்தம் என்பது இங்கு எதனைக் குறிக்கும் என்பதைவிளக்கு.
3. பஞ்சாட்சர மந்திரம், அஷ்டாட்சர மந்திரம் பெயர்க் காரணங்களைப் புலப்படுத்து.
4. 'ஞானசத்தினிபாதம்' பொருளை எழுது.
5. இரட்சண்ய யாத்திரிகம், தேவாரம் இவற்றைக் குறித்துச் சில குறிப்பு எழுது.
6. குமரகுருபரர் பாடிய சில நூல்களைக் குறிப்பிடு.
7. ஐம்பெரும் பூதங்கள் இன்ன என எடுத்து எழுது.
8. வேதநாயகம் பிள்ளை எழுதிய உரைநடை நூற் பெயரைக் கூறு.

# II. நீதிப்பாக்கள்

## 1. திருக்குறள்

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 1

உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர். 2

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ; மச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை. 3

அறிவுடையா ரெல்லா முடையா; ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். 4

வருமுன்னர்க் காவா தான் வாழ்க்கை, யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 5

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்,
வன்மையு ளெல்லாம் தலை. 6

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. 7

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு. 8

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும். 9

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்கச் சீர்த்த விடத்து. 10

தொடங்கற்க வெவ்வினையு; மெள்ளற்க முற்று
மிடங்கொண்ட பின்னல் லது. 11

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தந்தங்
கருமமே கட்டளைக் கல். 12

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். 13

காக்கை கரவாக் கரைந்துண்ணு; மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள. 14

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை;
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 15

வானோக்கி வாழு முலகெல்லாம்; மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. 16

ஆபயன் குன்று; மறுதொழிலோர் நூன்மறப்பர்:
காவலன் காவா னெனின். 17

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின், நெடுஞ்செல்வம்
நீடின்றி யாங்கே கெடும். 18

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட; மஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும். 19

எல்லார்க்கு மெல்லாம் நிகழ்பவை, யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில். 20

ஆக்க மதர்வினாய்ச் செல்லும் மசைவிலா
வூக்க முடையா னுழை. 21

குடியென்னுங் குன்றா விளக்கம், மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும். 22

முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும். 23

இன்பம் விழையா, னிடும்பை யியல்பென்பான்,
துன்ப முறுத லிலன். 24

தெரிதலும் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. 25

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 26

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 27

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 28

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 29

அறிவுரு வாராய்ந்த கல்வியம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 30

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 31

அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். 32

நன்றென்ன வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 33

கற்றாருள் கற்றா ரெனப்படுவர் கற்றார்முன்
கற்றசெலச் சொல்லு வார். 34

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. 35

உயர்வகலந் திண்மை பெருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கும் நூல். 36

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர்; செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. 37

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. 38

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து. 39

உடுக்கை யிழந்தவன் கைபோல, வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 40

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை
தான்சாந் துயரந் தரும். 41

அழிவந்த செயினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். 42

கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 43

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு; மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து. 44

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையின் பேதையா ரில். 45

வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. 46

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்றும்
துன்பத்துள் துன்பங் கெடின். 47

அஞ்சு மறியா னமைவில னீகலான்
தஞ்ச மெளியன் பகைக்கு. 48

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 49

வாள்போற் பகைவரை யஞ்சற்க; அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு. 50

## குறிப்புரை

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் தலை சிறந்த புலவர்-
இவர் எழுதியுள்ள நூலான திருக்குறளைப் புகழாதவர்

எவரும் இலர். இவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் மயிலையில் வாழ்ந்த காரணத்தால் இவருக்கு ஒரு கோயிலும் இங்கு உண்டு.

1. வேண்டுதல் வேண்டாமை இலான் - கடவுள். இடும்பை-துயர் 2. மாத்திரையர் - அளவுடையர், பயவா - பயன்படாத, களர்-விளைவுக்குரியதல்லாத நிலம். 5. வைத்தூறு - வைக்கோற்போர். 6. தமரர் - தம் உறவினராக. 14. அன்னநீரார் . அத்தன்மையுடையார். 15. அரண் - காவல், பொச்சாப்பு-பொய். 16. வான் - மழை. 17. அறுதொழிலோர் - வேட்டல், வேட்பித்தல், இரத்தல், ஈதல், ஓதல், ஓதுவித்தல் ஆகிய அறுதொழில் புரியும் அந்தணர். 18. கண்ணிலன் - தாட்சண்யம் இல்லாதவன் 19. கண்ணோட்டம் - தாட்சண்யம். 21. அதர் - வழி, ஆக்கம் - செல்வம், உடையார் உழை-உடையவனிடத்தில். 22. மடி - சோம்பல், மாசு - குற்றம். 23. திருவினை - செல்வத்தை, முயற்றின்மை-சோம்பல், இன்மை - தரித்திரம். 24. விழையான் - விரும்பாதவன், இடும்பை - துன்பம். 25. ஒருதலையா - உறுதியாக, அமைச்சு - மந்திரி. 26. கேளார் - பகைவர், வேட்ப - விரும்ப, 27. இளிவந்த - இழிவான செயல்கள், காட்சியவர் - அறிவுடையவர். 29. தூங்காது - சோம்பி இராமல், 30. செறிவு - சேர்க்கை. 31. இகல் - வன்மை. 32. கடுத்தது - கோபமாக உள்ளது. 33. மூத்து - முன்னே, இளவா - பேசாத, செறிவு - அடக்கம். 34. செல - கேட்பவர்களுக்கு விளங்கும்படி. 35. உறுபசி - பெரும்பசி, ஓவா - நீங்கா, பிணி - நோய், செறுபகை - அழிக்கும் பகைவர். 36. அரண் - கோட்டைமதில், நூல் - சாஸ்திரம். 37. இல்லாரை-ஏழைகளை. 38. கூற்று - இயமன்

உடன்று - கோபங்கொண்டு, ஆற்றல் - வன்மை, படை - சேனை. 39. விழுப்புண் - போரில் மார்பிலும், முகத்திலுக் ஏற்கும்புண். 40. உடுக்கை - ஆடை, இடுக்கண் - துன்பம். 41. கேண்மை - நட்பு. 43. இன்னாது - தீமையானது. வினை - செயல் 44. படை - ஆயுதம் ஒன்னார் பகைவர். அனைத்து - அத்தகையது 45. பேதையார் - அறிவினர் 46. வெண்மை - அறியாமை ஒண்மையுடையம். அறிவுடையவர்களாய் இருக்கிறோம். 47. இகல் - மாறுபாடு 48. அஞ்சும் - அஞ்சுதல் 49. வில்லேருழவர் - வீரர். சொல்லேருழவர் - புலவர் 50. கேள் - நண்பர்

கேள்விகள் :

1. கடவுள் இயல்பு யாது ?
2. அறிவுடையார் அறிவில்லார் ஆகிய இவ்விருவரின் வேறுபாடு யாது ?
3. சிக்கனமாக வாழவேண்டுமென்பதை ஆசிரியர் இங்ஙனம் அறிவுறுத்தியுள்ளார் ?
4. கொக்கின் இயல்பும் காக்கையின் இயல்பும் யாவை ?
5. தீயசொல்லால் ஏற்படும் தீங்குகள் எவை ?
6. முயற்சி, முயற்சியின்மைகளால்ஏற்படும்நிலைகள் எவை ?
7. பேசும் முறையாது ?
8. எவன் வினைக்குச் செல்லுதல் வேண்டும்.
9. அரசனிடம் எப்படி ஒழுகுதல் வேண்டும்.
10. நாடு எவ்வாறு இருக்கவேண்டும் ?
11. படையில் இலக்கணம் யாது ?
12. ஏன் பகைவரை நம்புதல் கூடாது ?

13. வில்லேர் உழவர் சொல்லேருழவர் யார் ?

14. யாரைக் கண்டு அஞ்சுதல் வேண்டும் ?

15. வெண்மை எனப்படுவது யாது ?

பயிற்சி :

1. கல்லாதவர், வருமுன்னர் காவாதான்வாழ்க்கை, இனத்தியல்பதாகும் அறிவு, கோல் நோக்கி வாழும் குடி, முகம் கடுத்தது காட்டும், நல்ல நட்பு—இவற்றிற்குக் கொடுக்கப்பட்ட உவமைகளை எடுத்துக்காட்டு.

2. அறு தொழில், அரசனுக்குரிய நால்வகை இயல்பு, மூன்றன் செறிவு,— இங்குக் கூறப்பட்ட தொகைச் சொற்களுக்கு விளக்கம் கூறு.

3. 1. 'தம்மிற் பெரியார்', 2. 'குடி என்னும்' 'இடுக்கண் படினும்', 4. 'தூங்குக தூங்கி,' 5. 'அஞ்சா மறியான்' - இந்தமுதலையுடைய குறட்பாக்களை எழுதிப் பதவுரையுந் தருக.

4. வள்ளுவரைக் குறித்தும் அவர் நூலைக் குறித்தும் வழங்கும் பெயர்களுள் இரண்டிரண்டு கூறு.

## 2. நீதி வெண்பா

### பிறப்பிடத்தால் பெருமை குறையாதவை

தாமரை பொன்முத்துச் சவாங்கோ ரோசனையின்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா தாமழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என் ? 1

## அன்பாற் பகைவரிடமும் அவாவின அடையலாம்

*பகைசேரும் எண்ணான்கு பற்கொண்டே நன்று*
*வகைசேர் சுவையருந்து மாபோல்,—தொகைசேர்*
*பகைவரிடம் மெய்யன்பு பாவித் தவரால்*
*சுகமுறுதல் நல்லோர் தொழில்.* 2

## பாம்பினும் கொடியர் துட்டர்

*துர்ச்சனரும் பாம்பும் துலையொக்கினும், பாம்பு*
*துர்ச்சனரை ஒக்குமோ, தோகையே! துர்ச்சனர்தாம்*
*எந்த விதத்தாலும் இணங்காரே, பாம்புமணி*
*மந்திரத்தால் ஆமே வசம்.* 3

## தனித்துண்ணல் தாழ்வானது

*தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கிவரோ*
*டின்புறத்தான் உண்டல் இனிதாமே—அன்புறவே*
*தக்கவரை இன்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்*
*கொக்கருந்தல் என்றே குறி.* 4

## சபைக்கு அழகு கற்றவனே

*கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்*
*வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்*
*எண்ணிலா வான்மீன் இலகிடினும், வானகத்தோர்*
*வெண்ணிலா ஆமோ விளம்பு?* 5

*இந்நூல் ஆசிரியர் யார் என்பது அறுதியிட்டு உறுதியாகக் கூறுதற்கு இல்லை. நீதிமுறைகளை வெண்பாவால் பாடப் பட்டிருத்தலின், இந்நூல் நீதிவெண்பா எனப் பெயர் பெற்றது.*

அருஞ் சொற்கள் :

1. *சவரம் - சாமரம், எள்ளார் - இழிவுக்காகக் கருதமாட்டார் மரு - மணம்,* 3. *துலை - தராசு*

தோகையே மயில்போலும் சாயலுடையபெண்ணே! துர்ச்சனர் - துஷ்டர் 4. தென்புலத்தார் - பிதுர்க்கள், விருந்து-புதிதாக வந்தவர், உறவினர் 5. மாறுவரோ ஒப்பாவரோ, அல் - இரவில், ஆரும் - வானில் பொருந்தும், வான்மீன் — ஆகாயத்திலுள்ள நட்சத்திரம்,இலகிடினும்-ஒளிவிட்டு விளங்கினாலும், விளம்பு-சொல்.

## கேள்விகள் :

1. உலகோர் எவ்வெவற்றை எள்ளார் ?
2. நல்லோர் எப்படி நடந்து கொள்வர் ?
3. துர்ச்சனரும் பாம்பும் எம்முறையில்ஒப்பாவர்? எம்முறையில் வேறுவர் ?
4. நாம் எவ்வெவர்க்குப் பங்கிட்டு உண்ணவேண்டும் ?
5. தனித்து உண்பது எதைப் போன்றது ?
6. யார் கற்றவர்க்கு ஒப்பாவார் ?
7. விண் மீன்கள் எதற்கு ஒப்பாகா ? ஏன் ?

## பயிற்சி

1. தாமரை, பொன், முத்து, சவ்வாது, கோரோசனை, பால், தேன், பட்டு, புனுகு, சவ்வாது, நெருப்பு ஆகிய இவற்றின் பிறப்பிடத்தைக் குறிப்பிடுக.
2. முதற் பாட்டின் கருத்தை எழுது.
3. நல்லவர் பகைவரிடம் அன்பு காட்டித் தம் தொழிலை முடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்குரிய உவமையை எழுது.

4. கற்றார் கல்லார்—இவர்களுக்கு உவமை களாகக் காட்டப்பட்ட பொருள்களைக் கூறு.

5. பிரித்து எழுது— சவ்வாதாமழல் மற்றெங்கே நன்று, எண்ணான்கு, எண்ணிலா, வெண்ணிலா.

## இனிது நாற்பது

ஏவது மாறா இளங்கிளைமை முன்னினிதே;
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே,
ஏருடையான் வேளாண்மை தான்இனி தாங்கினிதே,
தேரிற்கொள் நட்புத் திசைக்கு. (1)

சலவரைச் சாரா விடுதல் இனிதே;
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது. (2)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்தல் இனிதே;
அறம்புரிந் தல்லவை நீக்கல் இனிதே;
மறந்தேயும் மாணா மயரிகள் சேராத்
திறந்தெரிந்து வாழ்தல் இனிது. (3)

ஆற்றானை ஆற்றென் றலையாமை முன்னினிதே;
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே;
ஆக்கம் அழியினும் அல்லவை கூறாத்
தேர்ச்சியில் தேர்வினிய தில். (4)

நன்றிப் பயன்தூக்கி வாழ்தல் நனிஇனிதே;
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே;
அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியில் நன்கினிய தில். (5)

## ஆசிரியர் வரலாறு

இனிது நாற்பது என்னும் நூலைப் பாடியவர் பூதஞ் சேந்தனார் என்பவர். இவர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் விளங்கிய புலவர். மதுரையில் வாழ்ந்தவர். மக்கள் மேற்கொள்ள வேண்டிய இனிய குணங்களை ஒவ்வொரு வெண்பாவிலும் அமைத்து நாற்பது பாடல்களைப் பாடி இருத்தலின், இந்நூல் இனிது நாற்பது எனப் பெயர் பெற்றது.

## அருஞ் சொற்கள்

1. ஏவது - கட்டளை இடுவதை, மாறு - செய்யமறுக்காத - இளங்கிளைமை, சிறுவர், நவை போகான் - வினை கழிக்காதவனாய், 2. சலவர் - வஞ்சகர், மலர் தலை ஞாலத்து - பரந்த உலகத்தில், 3. வெளவான் - கவர்ந்து கொள்ளாதவனாய், அல்லவை - தீயவற்றை மாணா - நற்குண நற்செய்கையில்லாத, மயரிகளை - அறிவில்லாதவனிடத்தில், 3. ஆற்றானை - ஒன்றும் செய்யாதவனை, அலையாமை - வருத்தாதிருத்தல், கூற்றம் - இயமன், ஆக்கம் - செல்வம், 5. தூக்கி - ஆராய்ந்து, நனி - மிகவும், மன்றம் - நியாய சபையில், கொடும்பாடு - மாறுபாடாக, மாண்பு - மாட்சிமை, அடைக்கலம் - அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள், வெளவாத - கவர்ந்து கொள்ளாத.

## கேள்விகள்

1. நாம் எப்படிக் கற்றல் வேண்டும்?
2. உலகில் எவ்வாறு வாழ்தல் இனிது?
3. நாம் எந்தத் திறம் தெரிந்து வாழ வேண்டும்?

4. எதனை நாம் மனத்தில் கொண்டு வாழ வேண்டும்?

5. எதனைக் கவர்தல் கூடாது?

பயிற்சி :

1. இனிதாக உள்ள குணங்களை எல்லாம் எடுத்துக் காட்டு.

2. பிரித்துக் காட்டு :—

முன்னினிது, இனிதாங்கினிதே, தேரிற்கொள் நட்பு, மன்னுயிர்க் கெல்லாம்.

## இன்னா நாற்பது

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா;
கெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னா;
கடுமொழி யாளர் தொடர்பின்னா; இன்னா
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 1

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா;
இருட்கூர் சிறுநெறிதாம் தனிப்போக் கின்னா;
அருளில்லார் தம்கண் செலவின்னா, இன்னா;
பொருளில்லார் வண்மை புரிவு. 2

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல். 3

பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா;
"அரியவை செய்து" மென வுரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா, இன்னா;
பெரியார்க்குத் தீய செயல். 4

நெடுமரம் நீள்கோட் டுயர்பாய்தல் இன்னா;
கடுஞ்சின வேழத் தெதிர்சேறல் இன்னா;
ஒடுங்கி யரவுறையும் இல்லின்னா; இன்னா,
கடும்புலி வாழும் அதர். 5

## ஆசிரியர் வரலாறு

இன்னா நாற்பது என்பது மக்களுக்குத் தீமை கொடுக்கும் குணங்கள், இன்னின்ன என ஒவ்வொரு, வெண்பாவிலும் கூறப்பட்ட, நாற்பது வெண்பாவால் முடிந்த ஒரு நூல் அதனால் இப் பெயர் பெற்றது. இந் நூலாசிரியர் வரலாற்றை வேற்றுமை வேண்டா என்னும் பாடற் கீழ் எழுதப்பட்டிருப்பதிலிருந்து உணர்ந்து கொள்க.

### அருஞ் சொற்கள்:

1. மற மன்னர் - கோபமிக்க அரசர், இன்னா - தீது, புணை - தெப்பம், 2. கூர் - மிகுந்த, நெறி - வழியே செலவு - போதல், வண்மை புரிவு-தருமம் செய்தல், 3. ஆன்று - கல்வி கேள்விகளில் நிறைந்து, அவிந்த - அடங்கிய, சான்றோருள் - அறிஞர்களிடையே, பேதை - அறிவற்றவன், மான்று - மயங்கி, வழங்கல் - போவது, நோன்று - தவம் செய்து, ஈன்றாளை - தாயை, ஓம்பாவிடல் - காப்பாற்றாமல் விட்டுவிடுதல், 4. யாத்த - சேர்ந்திருந்த, தொடர் - நட்பு, அரியவை - செய்ய முடியாதனவாகிய அருமையான காரியங்களை, பரியார் - இரக்கம் காட்டாதவர், உற்ற கூற்று - அடைந்த துன்ப மொழிகள். 5. கோடு - கிளை, சினம் - கோபம், வேழம் - யானை சேறல் - செல்லுதல், உறையும் - வாழும், அதர் வழி.

### கேள்விகள்

1. யார் தொடர்பை விடுதல் வேண்டும்?
2. யார் தொடர்பைக் கொள்ளுதல் வேண்டும்?
3. யாரிடத்தில் செல்லுதல் கூடாது?
4. எந்நெறிகளில் செல்லுதல் கூடாது?

### பயிற்சி :

1. இன்றுதனவற்றைத் தொகுத்து எழுது.
2. இப்பாடற் பகுதியில் சிறுவர் விளையாட்டாகச் செய்யும் இரு செயல்களைக் குறிப்பிடு.

## கோவிந்த சதகம்

### கொடுத்தாற் குறை வராது

எடுத்தாலும் ஊறும் இறைத்தாலும்
ஊறும் இடைநடுவே
மடுத்தால் மறிபடு மோமணற்
கேணித்தண் ணீரதுபோல்?
அடுத்தாரை வாழ்விக்கச் செல்வமுண்
டானவர் அன்புடனே
கொடுத்தாற் குறைவருமோ? அச்சு
தாநந்த கோவிந்தனே! 1

### பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டோ?

உணத்தக்க நன்மருந் தாற்பிணி
போமென் றுலகிலுள்ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப்
பார்விடம் பாய்ந்துசெத்த

பிணத்துக்கும் பச்சிலை உண்டு;புல்லோர்க்
குப்பிறக் கும்பொல்லாக்
குணத்துக்கு நன்மருந் தேதச்சு
தாநந்த கோவிந்தனே! 2

## பொற்குடத்துக்குப் பொட்டழகேன் ?

சடத்துக் கழகென்பர் தான்கற்ற
கல்வி தகுமதல்லால்,
இடத்தக்க பூடணம் தானணி
யாவிடில் ஏசுவரோ?
புடத்துட் படத்தங்கக் கட்டி
யுருக்கிப் புதுக்கியபொற்
குடத்துக்குப் பொட்டழகேன்? அச்சு
தாநந்த கோவிந்தனே! 3

## கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது

ஒளித்தாலும் துர்க்குணம் போமோ?
குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர்நல் லோரா
வரோ?சென் றடுத்தடுத்துக்
களித்தா யிரந்தரம் காகம்
முழுகிக்கங் காநதியில்
குளித்தாலும் அன்னமொவ் வாதச்சு
தாநந்த கோவிந்தனே! 4

## கொடிக்குக் காய் கனமா ?

அடித்தழு தாட்டி வளர்த்திடும்
தாய்தன் அகமெலிவாய்
மிடித்திடி னும்பெற்ற பிள்ளை
களைக்கை விடகிலையாள்;

பொடித்தெழும் பிஞ்சு திரளாயும்
பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்கனமோ? அச்சு
தாநந்த கோவிந்தனே! 5

## ஆசிரியர் வரலாறு

சதகம் என்பது நூறு பாடல்கள் அடங்கிய ஒரு வகை நூல். இதில் காணப்படும் பாடல்கள் தோறும் கோவிந்தனே என்று முடிதலின், இது கோவிந்த சதகம் என்று பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் வெண்மணி நாராயண பாரதி, என்பவர். இவரைப்பற்றிய ஏனைய வரலாறுகளை அறிந்து கொள்ளக் கூடிய சாதனங்கள் இல்லை.

## அருஞ் சொற்கள்

1. மடுத்தால் - தடைப் படுத்தினால், மறிபடுமோ - தடைப்படுமோ. கேணி - கிணறு, அச்சுதன்-அழிவில்லாதவன். 2. பிணி - நோய், பரிகரிப்பர் - நீக்குவர், 3. சடம் - உடம்பு, பூடணம் - நகை, 4. புல்லர் - தீயவர், 5. மடிக்கிடினும் - ஏழையாய்ப் போனாலும்.

## கேள்விகள்

1. மணற் கேணியின் இயல்பு யாது?
2. எவர் செல்வம் குறையாது?
3. எதற்கு மருந்தில்லை? எவற்றிற்கு மருந்துண்டு?
4. உடலுக்குப் பூஷணம் எது?
5. எக் குடத்திற்குப் பொட்டு வேண்டா?
6. புல்லர் இயல்பு யாது?

7. செடிக்குக் காய் கனமாகாது என்னும் உவமை, எதை விளக்கக் கூறப் பட்டுள்ளது?

### பயிற்சி

1. புடத்துட்பட, அச்சுதானந்தன் - பிரித்துக் காட்டு.
2. ஏழைகட்கு உதவினால் செல்வம் குறையாது என்பதை உவமைகூறி விளக்கு.
3. புலவர் குணம் மாறாது என்பதை விளக்கக் காட்டப்பட்ட இரு உவமைகளை எழுது.
4. காக்கை கங்கையில் குளித்தாலும் அன்ன மாகாது என்னும் உவமையால் விளக்கப்பட்ட உவமேயத்தை எழுது.

## காகம் நாகத்தைக் கொன்ற கதை

கோடுறு சினையில், காகம் கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே,
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறு முட்டை எல்லாம்,
நாடியே குடித்துப் போட, நலிந்துளம் மெலிந்து வாடி, 1

தன்னுயிர்ப் பாங்க னான சம்புகன் அருகு போயங்,
கென்ன செய் குவேன்நான்?" என்ன "இதைக்கொலை [அரிதோ? நீபோய்
மன்னவன் தேவி ஆடும் மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து, போடுக பொந்தில்" என்ன.

காகம் அப்படியே செய்யக், காவலர் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்ந்தனர், ஈரும் போதில்,
நாகமங் கிருந்து சீற, நறுக்கினர் இருதுண் டாக
ஆகையால், உபாயத் தாகா இலையென அறையும் பின்னும்

—வீரமார்த்தாண்டதேவர்

## ஆசிரியர் வரலாறு

இப்பாடல்கள் பஞ்சதந்திரம் என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. ஆசிரியர் பெயர் வீர மார்த்தாண்ட தேவர் என்பது மட்டும் தெரிகின்றதே யொழிய, அவரைப் பற்றிய வேறு குறிப்பு யாதொன்றும் தெரிந்தபாடில்லை.

### அருஞ் சொற்கள் :

1. கோடுறுசினை - நீண்ட மரக்கிளைகளில், நலிந்து- வாட்டமுற்று, 2. பாங்கன் - தோழன், சம்புகன் - நரி, ஆடும் - குளிக்கும் மஞ்சனசாலை - குளியலறை, அணி - நகை, ஈர்ந்தனர் - வெட்டினர், அறையும்- சொல்லும்.

### கேள்விகள் :

1. காகம் எங்கு வாழ்ந்து வந்தது?
2. காகம் இடும் முட்டைகள் என்னவாயின?
3. "என்ன செய்குவேன் நான்"—இது யாருக்கு யாரால் கூறப்பட்டது?

### பயிற்சி :

1. இக்கதையைச் சுருக்கி எழுது.
2. இதிலிருந்து அறிந்து கொண்ட நீதியை எடுத்துக் காட்டு:

## உண்மையுள்ள வேலையாள்

நாளாக நாளாகநம் மிடத்தே கண்ணனுக்குப்
பற்று மிகுந்துவரப் பார்க்கின்றேன், கண்ணனால்
பெற்றுவரும் நன்மையெலாம் பேசி முடியாது.
கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல் என்குடும்பம்

வண்ணமுறக் காக்கின்றான்; வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீடுபெருக்குகிறான்; வீதிசுத்த மாக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெலாம் தட்டி அடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்,
ஒக்கநயம் காட்டுகின்றான்; ஒன்றும் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப் பால்வாங்கி, மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போலப் பிரியமுற ஆதரித்து,
நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்,
எங்கிருந்தோ வந்தான்; "இடைச்சாதி" என்றுசொன்னான்"
இங்கிவனை யான்பெறவே என்னதவம் செய்துவிட்டேன்!
கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்,
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர்சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்
தெளிவே வடிவாம் சிவஞானம் என்றுசொலும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கிவருகின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்கொண்டேன் கண்கொண்டேன் கண்டுகொண்டேன்.

—பாரதியார்.

## ஆசிரியர் வரலாறு

ஆசிரியர் சுப்பிரமணிய பாரதியார். இவர் எட்டையபுரத்தில் அந்தணமரபில் பிறந்தவர். இவர் நல்ல கவிகளைப் பாடும் வன்மையை இளமையிலேயே பெற்றவர். இவர்

தமிழ் ஆசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும் இருந்தவர். இவர் இருபதாம் நூற்றாண்டு புலவர். சென்னைத் திருவல்லிக்கேணியில் தான் உயிர் நீங்கியவர். இவர் பாடிய பாடல்கள்பல; அவற்றுள் சில; கண்ணன் பாட்டு, பாப்பாப் பாட்டு, பாஞ்சாலி சபதம், முரசு பாட்டு முதலியன.

## அருஞ் சொற்கள்

வண்ணம் - அழகு, உற-பொருந்த, தாதியார்-தோழிமார், வாத்தி-ஆசிரியர், பண்பு-குணம், அகம் - வீடு, கவிதை-பாட்டு, சிவயோகம்-சிவனைத் தியானித்திருத்தல், சிவ ஞானம்- சிவனையடையும் அறிவு, கண் - அறிவு.

## கேள்விகள் :

1. கண்ணன் வேலையில் அமர்ந்தபின் வீட்டை எப்படிக் கவனித்துக் கொண்டான் ?
2. கண்ணன் வீட்டில் உள்ளவருக்கு எவ்வெவ்வாறு அமைந்திருந்தான் ?
3. கண்ணனால் பாரதியார் பெற்ற நலன்கள் யாவை?

## பயிற்சி :

1. 'கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல்' உவமைப் பொருத்தத்தை விளக்கு.
2. 'கண்ணன் ஒரு நல்ல வேலையாள்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.
3. இப்பாடத்திலிருந்து வேலையாள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை எடுத்துக் காட்டு.

## வேற்றுமை வேண்டா

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மானிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்,

சாவதும் வேறிலை; தரணி யோர்க்கே;
குலமும் ஒன்றே; குடியும் ஒன்றே;
இறப்பும் ஒன்றே; பிறப்பும் ஒன்றே;
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்,

முன்னோ ருரைத்த உரைதவ றுமல்,
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து,

ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்புநலந் தருமோ பேதை யீரே!

**கபிலர்.**

### ஆசிரியர் வரலாறு

சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்; அந்தணமரபினர்; பாரியின் சிறந்தநண்பர்; பாணரும் இவருக்குரிய நண்பராவர். இதனால் கபிலபாணர் என்னும் தொடரும் வழங்கப் பெறுகிறது. இவர் பல தனித்தனிப் பாடல்களைப் பாடியுள்ளார். தனித்தனி நூல்களையும் பாடியுள்ளார். இன்னா நாற்பது என்னும் நூலையும் பாடியவர் இவரே.

அருஞ் சொற்கள்:

மாரி - மழை, வரைந்து - வரையறுத்து, மா - பெரிய, திரு - செல்வம், வறுமை - தரித்திரம், பேறு - பாக்கியம், தரணியோர் - பூமியில் உள்ளோர், இரப்பவர்-யாசகம் செய்பவர், புலை - புலால் புசித்தல், அல்லை - தவிர, பேணி - போற்றி, சீலமும் - ஒழுக்கமும், பேதையீர் - அறிவீனர்களே.

கேள்விகள்:

1. உலகில் எல்லோருக்கும் பொதுப்பட உதவும் இயற்கைப் பொருள்கள் எவை?
2. எவை எவை எல்லோருக்கும் ஒன்றாகவே விளங்குகின்றன?

பயிற்சி

1. இப்பாடற் பொருளைத் தொகுத்து எழுது.
2. இப்பாடல் கூறவந்த கருத்து இன்னதெனப் புலப்படுத்து.

## எலிப்பெண்

பருந்தெடுத்த பெண்ணெலியும்
பருந்தின்வாய் தப்பியங்கே
இருந்தமுனி கரத்தில்விழ,
ஏதெனவே நோக்கியவன்,
அருந்தவத்தால் பெண்பிள்ளை
யாக்கியவளை யாள்கையில்
"பொருந்தவளர்" எனக்கொடுத்தான்;
பூவையுமங் கதைவளர்த்தாள்.

அந்தமின்னைப் பலவானுக்
களித்திடுவோம் எனமுனிவன்
சிந்தைசில எண்ணிக்கொடு
செங்கதிரோன் தனையழைத்தே,
"இந்தமின்னை நீ கொள்" ளென
இரவியறிந் "தெனைமறைக்கும்
முந்தியமே கம்பலவான்
முனிவ! அவன் கைக்கொ" டென, 2

மேகத்தை யழைத் "திவளை
வீரும் புகநீ" எனமுனிவன்
தாகத்தோ டுமுரைக்க
அவன்தானுமறிந் "தெனைத்துகளாய்
மாகத்தில் அடிக்குமந்த
வாயுபக வான்பலவான்
மோகத்தோ டவற்களித்தல்
முனிவ! நன்" றென்றனுமே, 3

வாயுவையு மழைத் "திவளை
மணம்புணர்க நீ" யென்று
நேயமுடன் இருடிசொல
நிறைந்திடுமா ருதமறிந்தே,
தூயவனே! "யெனைமறைக்கும்
துங்கவரை யேபலவான்;
சேயிழையை அவற்கருளிச்
செய்க" வெனச் செப்பிடவே, 4

மலையரையன் தனையழைத்து
"மங்கைமணம் புணர்க" வென
குலவரையு மறிந்துகொண்டே
குறுமுனிவன் தனைநோக்கி,

"நிலவரையே யெனையறுக்க
நினைக்குமந்த மூடிகமே,
பலமுடைய தகற்தளித்தல்
பண்பாகு" மெனக்கூற, 5

எலியரசன் தனையழைத்து
"இவளைமணம் புணர்க"வென
"நலதிவளென் வளையில்வர
நாடின்மணம் புணர்வே"னென
எலிமகளைத் தவமுனிவன்
எலியரசன் விருப்பம்போல்
எலியுருவ மாக்கிவிட்டான்
இசைந்தவனும் கொடுபோனன். 6

—வீரமார்த்தாண்ட தேவர்

## ஆசிரியர் வரலாறு

இந்நூலாசிய வரலாறு முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

## அருஞ்சொற்கள்

1. பூவை - திருமகள் போலும் அழகுடைய முனிவர் மனைவி 2. மின் - மின்னல் போலும் ஒளியுடைய பெண், அளித்திடுவோம் - திருமணம் செய்து கொடுப்போம், சிந்தை - மனத்தில், செங்கதிரோன் - சூரியன், இரவி - சூரியன், 3. தாகத்தோடு - விருப்பத்தோடு, தூளாய் - தூளாக, மாகத்தில் - ஆகாயத்தில், வாயு - காற்று, 4. இருடி - இருஷி, மாருதம் — காற்று, தூயவனே - பரிசுத்தமான முனிவனே, துங்கவரை - உயரியமலை, சேயிழை - நல்ல நகையணிந்த பெண். 5. அரையன் - அரசன், குலவரை - மேன்மை பொருந்தியமலை, மூடிகம் - எலி, பண்பு — முறைமை.

கேள்விகள் :

1. எலி எப்படிப் பெண்ணுருப் பெற்றது ?
2. யார் யார் எலிப்பெண்ணை மணக்க மறுத்தனர் ?
3. இவ்வாறு மறுத்தவர்கள் என்னென்னக் காரணம் காட்டினர் ?
4. கடைசியில் எலிப்பெண்ணை மணந்தது எது ? அஃது எப்படி மணந்தது ?

பயிற்சி :

1. இப்பாடல்களில் அமைந்த கதையைச் சுருக்கி எழுது.
2. இக்கதையால் அறியும் நீதியை எடுத்துக்காட்டு.

## பல் சுவைப் பாடல்கள்

### கைத் தொழில்

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே !
 மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே
உண்ணக் காய்கனி தந்திடு வீரே
 உழுது நன்செய்ப் பயிரிடு வீரே
எண்ணெய் பாலெய் கொணர்ந்திடு வீரே
 இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்
 மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே. 1

—பாரதியார்.

## அம்மானை

தென்புலியூர் அம்பலவா! தில்லைச் சிற்றம்பலத்தே
வெம்புலியோன் றெந்நாளும் மேவுங்காண் அம்மானை:
வெம்புலியோன் றெந்நாளும் மேவுமே யாமாகில்,
அம்பலத்தை விட்டே அகலாதோ அம்மானை?
ஆட்டைவிட்டு வேங்கை அகலுமோ அம்மானை! 2
—இரட்டையர்.

## ஏசல்

நாட்டுக்குள் இரந்தும் பசிக்காற்ற மாட்டாமல்—வாரி
நஞ்சையெல்லாம் உண்டா னுங்கள் நாதன் அல்லோடி!
மாட்டுப்பிற கேதிரிந்தும் சோற்றுக்கில்லாமல்—வெறும்
மண்ணையுண்டான் உங்கள்முகில் வண்ணன் அல்லோடி! 3
—முக்கூடற்பள்ளு.

## சுதந்தரம்

மீன்கடலே எழுந்தாலும் விண்சுடரே விழுந்தாலும்
மான்மலைகள் சாய்ந்தாலும் மண்கம்ப மானாலும்
ஊன்கொந்திக் கண்டதுண்டம் ஒன்னலர்கள்செய்தாலும்
வான்மருவ நேர்ந்தாலும் மறப்பதன்று சுதந்திரமே. 4
—திரு. வி. க.

## நாட்டுச் சிறப்பு

செந்நெற்கதிர் பெருத்துச் செழித்து வளர்கிறதும்
கன்னல் கொழுத்துக் காட்டை மணப்பதுவும்
வன்புலியும் பசுவும் மருவியே வாழ்கிறதும்
காடைக் கவுதாரி காட்டுப்புறு கூவுறதும்
பேடைமயில் கூடிப் பிரியமடை கிறதும்
புன்னைபலாச் சோலை பொருந்தி நிறைந்திடவும்

சந்தனச் சோலைகளும் சாதிமல்லி புத்திடவும்
மந்தாரை கொங்கு மல்லிகைப்பூ சாலைகளும்
தாமரைப் பொய்கைகளும் தடாகமுள்ள ஏரிகளும்
வாமமுறும் காஞறும் வம்புகளும் என்னசொல்வேன்!

—தேசிங்குராஜன் கதை.

## ஆசிரியர் வரலாறு

1. பாரதியார் : இவர் எட்டயபுரத்தில் பிறந்து புதுவையிலும் சென்னையிலும் வாழ்ந்த இருபதாம் நூற்றாண்டு புலவர். அந்தண மரபினர். தமிழ் ஆசிரியராகவும் பத்திராதிபராகவும், தொழில் புரிந்தவர். இளமையிலேயே பாடும் வன்மை பெற்றவர். இவர் பாடிய பாடல்கள் கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, நாட்டுப் பாடல் முதலியன.

அருஞ் சொற்கள் :

*மனை - வீடு, நன்செய் - நல்ல நிலம், நெல், கரும்பு, கோதுமைகள் வளரும் நிலம், விண்ணில் - தெய்வ லோகத்தில், வானவர் - தேவர், பார்மிசை - பூமியில்.*

## ஆசிரியர் வரலாறு

2. இரட்டையர் : இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் என்றும் கூறப்படுவர். இவர்களுள் ஒருவர் நொண்டி, மற்றவர் குருடர். குருடர் நொண்டியைச் சுமப்பர். இவர்கள் ஊரூராகச் சென்று பாடல் பாடிப் பிழைத்துவந்தவர்கள். இவர்கள் இருவரும் சேர்ந்தே பாடுவர். ஒருபாட்டில் முன்னடிகள் ஒருவராலும் பின்னடிகள் மற்றொருவராலும் பாடப்பட்டு இருக்கும். இவர்கள் காலம் கி. பி. 15 ஆம் நூற்றாண்டு; இவர்கள் தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர் கலம்பகம்,

ஏகாம்பரநாதர் உலா ஆகிய மூன்று நூல்களைப் பாடியுள்ளார். இவையே அன்றிப் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

அருஞ் சொற்கள் :

தென்புலியூர் - சிதம்பரம், அம்பலவா - பொற் சபையில் நடமிடும் நடராஜனே, தில்லை - சிதம்பரம், சிற்றம்பலம் - சிதம்பரத்தில் நடராஜர் நடனம் செய்யும் சபை, வெம்புலி - கொடிய புலி, புலிக் காலையுடைய வியாக்ரபாத முனிவர், மேவும் - பொருந்தியிருக்கும், ஆட்டை - ஆட்டத்தை ஆடு என்னும் விலங்கை, அம்மானை - இது பெண்கள் ஆடும் ஆட்ட வகைகளுள் ஒன்று, ஒருவர் ஒரு கேள்வி கேட்க மற்றொருவர் அதற்கு விடை கூறும் முறையில் அமைந்திருக்கும். இது கலம்பகத்தில் ஓர் உறுப்பு.

## ஆசிரியர் வரலாறு

3. முக்கூடற்பள்ளு ஆசிரியர் வரலாறு ஒழுங்காகக் கிடைத்திலது. பள்ளு என்பது ஒருவகைத் தமிழ் நூல். இதில் உழவர், உழத்தியர் செயல் அவர்கள் நாற்று நடுதல், அறுவடை செய்தல் முதலிய நெல் சாகுபடி முறைகளை அழகுறச் சொல்லும் நூல். முக்கூடல் மூன்று நதிகள் சங்கமமாகும் இடம்.

அருஞ் சொற்கள் :

ஏசல் - ஒருவர்க் கொருவர் தாழ்வாகப் பேசிக் கொள்ளுதல், இரந்தும் - பிச்சையெடுத்தும், நஞ்சை - விஷத்தை, உங்கள் நாதன் - உங்கள் தெய்வமான சிவபெருமான், முகில் வண்ணன் - மேக நிறம் பொருந்திய திருமால், இங்குச் சைவ சமயப் பெண்

ஒருத்தியும், வைஷ்ணவச் சமயப் பெண்ணொருத்தியும் ஏசிக்கொள்ளும் முறையில் பாடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் வரலாறு

4. தேசிங்குராஜன் கதையைப்பாடியவர் புகழேந்திப் புலவர் என்று கூறுகின்றனர். ஆனால், அது அவ்வளவு பொருத்தமாகக் காணப்படவில்லை. இந்நூலின் நடைக்கும் புகழேந்தியார் பாடல் நடைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு.

அருஞ் சொறகள்:

கன்னல் - கரும்பு, மருவியே - கலந்து, வாமம் - அழகு, உறும் - பொருந்திய, வம்பு - புதுமை வாசனை.

## ஆசிரியர் வரலாறு

5. இப்பாடலைப் பாடியவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் ஆவார். இவர் திருவாரூரில் சைவ வேளாள மரபில் பிறந்தவர். இப்பொழுதும் வாழ்ந்து கொண்டு தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் தொழிலாளர் உலகத்திற்குந் தொண்டு செய்து வருகிறவர். இவர் எழுதிய உரை நடை நூல்களுக்கும் பாடல் நூல்களுக்கும் அளவில்லை. உரை நடை நூல்களுள் சில பெண்ணின் பெருமை, என் கடன் பணிசெய்து கிடப்பது என்பன. முருகன் அருள் வேட்டல், நாட்டுப் பாடல் முதலியன இவர் இயற்றிய செய்யுட்களில் சில. நல்ல சொற்பொழிவாளர்.

அருஞ் சொற்கள்:

விண்சுடர் - ஆகாயத்தில் எழும் சந்திர சூரியர், மால் - பெரிய, மண்கம்பம் - பூமி அதிர்ச்சி, ஊன் -

தசை, ஒன்னலர் - பகைவர், வான் - தேவலோகம், மருவ - சேர.

## கேள்விகள் :

1. மண்ணில் காப்பவரும் விண்ணில் காப்பவரும் யாவர்?
2. தொழிளாளிகள் எவ்வெத் தொழிலைச் செய்து முடிக்க வேண்டும்?
3. எது அம்பலத்தை விட்டு ஏகாது? ஏன்?
4. வெம்புலி என்றது எதனை?
5. இரு பெண்கள் எங்ஙனம் ஏசிக்கொண்டனர்?
6. தேசிங்கு மன்னன் காலத்துப் பறவைகள் விலங்குகள் எங்ஙனம் வாழ்ந்தன?
7. ஒருநாடு அழிவதற்கு முன் தோன்றக்கூடிய உற்பாதங்கள் எவை?
8. எதனை மறக்க இயலாது?
9. பகைவர் செய்யும் செயல் யாது?

## பயிற்சி :

1. அம்மானை, ஏசல், பள்ளு இவற்றைப் பற்றிச்சிறு குறிப்பு எழுது.
2. வியாக்கரபாதரோடுநிற்கும் மற்றொரு முனிவர் பெயரைக் குறிப்பிடு.
3. 'ஆட்டை விட்டு வேங்கை அகலுமோ' இதற்கு இரு பொருள் கூறு.
4. 'நஞ்சையுண்டான்' இதில் அடங்கிய கதையினை எழுது
5. தேசிங்கு மன்னன் நாட்டு வளத்தைக் குறித்து ஒரு கட்டுரை எழுது.